Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

ஆசியாவின் நம்பர் 1 சீமேந்து
SLS 107 அங்கீகாரம் பெற்றது.
ISO 9002 தரம் பெற்றது.
BSS 12 - 1991 தரத்திற்கு அமைவானது.
இவை அனைத்தையும் கொண்ட உயர்தர சீமேந்து.
ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமேந்து
ராம்கோ
(சீ-1295)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 01 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 20 (18.09.2003) வியாழக்கிழமை இதழ்: 348

# சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா பூரண ஆதரவு!

## இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் அறிக்கை

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கும், இந்த சமாதான முயற்சிகளில் நோர்வே அளித்துவரும் பங்களிப்புக்கும் தனது ஆதரவை வழங்குவதாக அமெரிக்க அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டு நேற்று முன்தினத்துடன் ஒரு வருடம் பூர்த்தியானதை முன்னிட்டு, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இருபது வருடமாக இடம்பெற்று வந்த உள்நாட்டு யுத்தத்துக்கு முடிவு காண்பதற்காக இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தமை வரவேற்கத்தக்கதென்றும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியான நிலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சு குறித்து விளக்க அகாஷி இந்தியாவுக்குப் பயணம்!

(கொழும்பு)

ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி இலங்கைக்கான தனது விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக, அரச மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்திய பின்னரே - அகாஷி புதுடெல்கிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இவர் புதுடெல்கியில் இந்திய அரசியல் தலைவர்களைச் சந்தித்து தற்போதைய சமாதான முயற்சிகளின் நிலை தொடர்பாக எடுத்து விளக்குவார் எனத் தெரியவருகிறது.

இலங்கையில் சமாதான முயற்சிகளில் ஜப்பானியத் தலையீடு குறித்து இந்தியா அதிருப்தியுற்றுள்ள நிலையில், அகாஷியின் இந்திய விஜயம் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் ஜெனரலின் கொழும்பு விஜயம்: தகவலை மறைத்து விட்டதாக இலங்கை மீது இந்தியா சீற்றம்!

## பாதுகாப்பு அமைச்சில் இன்று உயர்மட்ட மாநாடு

யாழ்ப்பாணத்திலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக இன்று பாதுகாப்பு அமைச்சில் மாநாடு ஒன்று இடம்பெறவுள்ளது.

மாலை 3 மணிக்கு பாதுகாப்பு அமைச்சில் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் கலந்துகொள்வார் என இந்து சமய கலாசார அமைச்சின் ஊடகச் செய்தி தெரிவித்துள்ளது.

இந்தப் பாதுகாப்பு மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, மேலதிக செயலாளர் கே.டபிள்யூ.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படைத் தளபதியின் விஜயமும் ரத்து

(புதுடெல்கி)

**இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் மாதவேந்திரசிங் இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்த சமயத்தில், பாகிஸ்தானிய கூட்டுப்படைத் தலைமை அதிகாரியும் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள விருந்தது குறித்து இந்தியாவுக்குத் தகவல் வழங்கப்படாதமையானது, இந்திய அரசுக்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக - இந்திய வெளியுறவு அமைச்சை ஆதாரங் காட்டி, இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

பாகிஸ்தானின் கூட்டுப்படைத் தலைமை அதிகாரியான ஜெனரல் முகமட் அஸீஸ்கான் தலைமையி

கடற்படைக்கோ இந்திய வெளிவிவகார அமைச்சுக்கோ தெரியப்படுத்தப்படாததாலேயே, இந்திய கடற்

இந்தியக் கடற்படைத் தளபதியின் கொழும்பு விஜயம் பிற்போடப்படவில்லை என்றும் இந்த விஜயம் ரத்



(10 ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படைத் தளபதியின் விஜயமும் ரத்து

**(புதுடெல்கி)**

**இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் மாதவேந்திரசிங் இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்த சமயத்தில், பாகிஸ்தானிய கூட்டுப்படைத் தலைமை அதிகாரியும் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள விருந்தது குறித்து இந்தியாவுக்குத் தகவல் வழங்கப்படாதமையானது, இந்திய அரசுக்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாக - இந்திய வெளியுறவு அமைச்சை ஆதாரங் காட்டி, இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

பாகிஸ்தானின் கூட்டுப்படைத் தலைமை அதிகாரியான ஜெனரல் முகமட் அஸீஸ்கான் தலைமையிலான ஐந்து உயரதிகாரிகள் கொண்ட குழுவினர் கொழும்புக்கு விஜயம் செய்யவிருப்பது குறித்து இந்தியக் கடற்படைக்கோ இந்திய வெளிவிவகார அமைச்சுக்கோ தெரியப்படுத்தப்படாததாலேயே, இந்திய கடற்படைத் தளபதியின் கொழும்பு விஜயம் ரத்துச்செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தியக் கடற்படைத் தளபதியின் கொழும்பு விஜயம் பிற்போடப்படவில்லை என்றும் இந்த விஜயம் ரத்துச்செய்யப்பட்டுவிட்டதாகவும் இந்தியக் கடற்படை தலைமையக வட்டா

(10 ஆம் பக்கம் பார்க்க)



கொழும்பு வந்த பாகிஸ்தான் ஜெனரல் மொஹமட் அஸிஸ்கானை கைலாகு கொடுத்து வரவேற்கிறார் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல.

# தேசிய பிக்கு முன்னணியினர் கொழும்பில் சத்தியாக்கிரகம்!



கொழும்பில் பிக்குகள் முன்னணி நடத்திய சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்ட விமல் வீரவன்ச மற்றும் தினேஷ் குணவர்த்தன.

தேசிய பிக்குகள் முன்னணியைச் சேர்ந்த பிக்குகள் நேற்று மாலை கொழும்பு புறக்கோட்டையில் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாகசபை என்ற பெயரில் விடுதலைப் புலிகள் கேட்கும் தமிழீழத்தை அரசு கொடுக்கவுள்ளது. எனவே, இதனைத் தடுக்க சகல மக்களும் ஒன்றுபடவேண்டும் என்பதனை வற்புறுத்தியே இந்தச் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இன்று கிளிநொச்சி வரும் ஹெல்கிசன் தமிழ்ச்செல்வனை சந்தித்து பேசுவார்!

இன்று கிளிநொச்சி வரவுள்ள நோர்வே துணை வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் தலைமையிலான குழுவினர், காலை 11 மணிக்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தவுள்ளனர்.

நோர்வேயின் துணை வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் வியன்னாவிலிருந்து நேற்றுக் காலை 9.20 மணிக்கு இலங்கை வந்தனர்.

இவர்கள் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவரை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நேற்றுமுன்தினம் தான் நடத்திய பேச்சுவார்த்தைகள் சம்பந்தமாக, கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலவ்சன் விரிவாக எடுத்து விளக்கினார். அத்துடன் விடுதலைப் புலிகளின் குரங்குப்பாஞ்சான் முகாம் சம்பந்தமாகவும் ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பினையடுத்து விதார் ஹெல்கிசன் குழுவினர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஒஸ்லோ மாநகரத் தேர்தலில் ஈழத் தமிழர் வெற்றிபெற்றார்!



நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோ மாநகரசபைக்கு இடம்பெற்ற தேர்தலில், ஈழத் தமிழரான பாலசிங்கம் யோகராசா (பாஸ்கரன்) வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் இவருக்கெதிராக பலத்த பிரசாரங்களை மேற்கொண்டிருந்தபோதும்- கூடியளவிலான விருப்பு வாக்குகளைப் பெற்று இவர் ஒஸ்லோ மாநகர சபை உறுப்பினராகத் தெரிவாகியுள்ளார்.

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 01360290 01360291
email . jaffna @ expoavi . com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...
(சி -11

# சின்னஞ்சிறு செய்திகள்

## தடகளப் போட்டி

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் வருடாந்த தடகளப் போட்டிகள் நாளை நடைபெறவுள்ளன.

நாளை மாலை 2 மணிக்கு கலாசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டிக்கு- யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

## செயற்திட்ட மதிப்பீடு

யுனிசெப் அனுசரணையுடன், யாழ் மாவட்டத்தில் 150 பாடசாலைகளில் மொழித்திறன்,கணிதத்திறன் விருத்தி செயற்திட்டம் தொடர்பான மதிப்பீடு நடைபெறவுள்ளது.

தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, முதலாவது செயற்திட்ட மதிப்பீடு எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளதனால், நாளை அதிபர்கள் இதற்குரிய வினாத்தாள்களைப் பெற்றுக்கொள்ளுமாறு, யாழ் வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த செயற்திட்ட மதிப்பீட்டில், 4500 மாணவர்கள் பங்குபற்றுகின்றனர்.

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள், இன்று தொடங்கி, எதிர்வரும் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகள் - 16 வயது, 18 வயது என இரண்டு பிரிவுகளாக நடைபெறும். கீழ்ப்பிரிவில் - 20 பாடசாலைகளும், மேற்பிரிவில் - 15 பாடசாலைகளும் கலந்துகொள்ளவுள்ளன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானம், திக்கம் மைதானம், டயமன்ஸ் விளையாட்டு மைதானம் ஆகிய இடங்களில் இந்தப் போட்டிகள் பிற்பகல் 2.30 மணியிலிருந்து நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டியில் பங்குபற்றும பாடசாலை மாணவர்களை உரிய ஆவணங்களுடன், குறித்த நேரத்திற்கு அனுப்பிவைக்குமாறு - வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம், பாடசாலை அதிபர்களைக் கேட்டுள்ளார்.

## புதிய நிர்வாகசபைத் தெரிவு

திருமுறிகண்டி பிள்ளையார் ஆலய புதிய நிர்வாகசபைத் தெரிவு, கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவித் திட்ட நிறைவேற்றுப் பணிப்பாளர் தலைமையில் - இந்த நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

இதில் தலைவராக - டொக்டர் கே.வி.கே.திருலோகமூர்த்தியும், செயலாளராக- ஏ.வி.கே.மாணிக்கமும், பொருளாளராக- க.ரோகிணியும், இணைப்பாளராக - சு.சபாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகசபை உறுப்பினர்களாக 09 பேரும் தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர்களாக - கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

## விடியோப் படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு வழங்கிவரும் திரைப்படக்காட்சித் தொடரில், இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ. சிதம்பரப்பிள்ளையின் வாழ்வைச் சித்தரிக்கும் "கப்பலோட்டிய தமிழன்' திரைப்படம், எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணிக்கு புவியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும். சிவாஜி கணேசன் நடித்துள்ள இந்தப் படத்தின் - நெறியாளர் பி.ஆர்.பந்துலூ ஆவர். ஆர்வலர்கள் எவரும் கலந்துகொண்டு பயன்பெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் 'இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

## கசிப்பு உற்பத்தியாளருக்கு ஒருவருட கால கடூழியச்சிறை

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியை செய்த ஒருவருக்கு, ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனையை, நேற்றுமுன்தினம் யாழ். நீதிவான் விசாரணைகளின்போது தீர்ப்பு வழங்கினார்.

இவர், நீதிமன்றத்தில் தான் குற்றவாளி என தெரிவித்தையடுத்து, விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, - இந்த தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

## 3 ஆம் ஆண்டு புரட்சிகர அஞ்சலி

| தாயின் மடியில் | | தமிழ் அன்னை மடியில் |
|---|---|---|
| 24 ♠ 08 ♠ 1972 |  | 18 ♠ 09 ♠ 2000 |

**சின்னவன் குணபாலசிங்கம்**

**மேஜர் தமிழ்வாணன்**

(மறவன்புலோ, சாவகச்சேரி)

எமது குடும்பத்தின் பாரம்
சுமந்தவனே எம் மகனே!
தமிழ்மக்கள் துயர் துடைக்க
தமிழர் அணி சேர்ந்தாயே - தமிழ்வாணா
ஆண்டு மூன்று ஆனாலும்
ஆறாது எம் துயரம்

பொதுமக்கள், போராளிகள் அனைவரையும் (18-09-2003) இன்று நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கேற்கும்படி அன்புடன் ,வேண்டுகின்றோம்.

சங்கக்கடையடி நாவற்குழி — இங்ஙனம் குடும்பத்தினர்

(486)

ராஜா யாழ்ப்பாணம்.
அருண், வடிவேல், விஜயகுமார் நடித்த
அன்பு
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)
(சி-1424)

திறைஞ்சனாஸ் சங்கானை
எம்.ஜி.ஆர், ஜெயலலிதா நடித்த
ராமன் தேடிய சீதை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
WISH MASTER
(கராட்டிப்படம்)
(சி-1425)

## வாழ்த்துகிறோம்



எமது பள்ளியின் முதல்வர்

**செல்வி.அன்னலட்சுமி கந்தையா**

அவர்கள் அகவை அறுபதில் இன்று தனது பணியினை நிறைவு செய்து ஓய்வுபெறுகிறார். இவரது ஓய்வுக் காலம் சிறப்பாகவும், மகிழ்ச்சியாகவும் அமைய வாழ்த்துகின்றோம்.

ஆரம்பக் கல்வி மன்றம், தொழில்நுட்பமன்றம், ஆங்கில மன்றம்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

(483)

# லெப்.கேணல் தியாக தீபம் திலீபன் 16 ஆம் ஆண்டு நினைவு



தியாகி திலீபனே!
யாருக்காக இறந்தாயோ - அன்று
அவர்களுடனேயே வாழ்கின்றாய் இன்றும்
உன்னை மலர்தூவி - நினைக்கின்றது
இந்நாளில் விடுதிச் சங்கம்

விடுதிகள் உரிமையாளர் சங்கம் (Lodge)
யாழ்.மாவட்டம்.

(487)

# பொங்குதமிழ் நிகழ்வையொட்டி
# எழுச்சி நாட்களாகப் பிரகடனம்!

வவுனியாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வினையொட்டி இன்று தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை எழுச்சி நாட்களை அனுஷ்டிக்குமாறு, பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழுவினர் கேட்டுள்ளனர்.

வவுனியா நகரிலுள்ள முக்கிய சந்திகளில் - பதாகைகள் கட்டியுள்ளதுடன், சிவப்பு, மஞ்சள் கொடிகளும் பறக்கவிடப்பட்டுள்ளன. வவுனியா நகரம் விழாக்கோலமாகத் காட்சி தருகிறது.

அரங்கச் செயற்பாட்டுக் குழுவினர், கல்வியியற் கல்லூரி மாணவர்கள், வவுனியா வளாகத்தினர் என அனைத்து கல்விசார் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும், மக்களைச் சந்தித்து அவர்களது மனக்கிடக்கைகளை - நடைபெறவிருக்கும் பொங்குதமிழில் வெளிக்கொணர்வதற்கான சந்திப்புக்களை நடத்திவருகின்றனர்.

எதிர்வரும் 24 ஆம் திகதி பிற்பகல் மூன்று மணிக்கு, வவுனியா நகரசபை திறந்தவெளி அரங்கில் "எமது நிலம் எமக்கு வேண்டும்" எனும் தொனிப்பொருளில் நடைபெறவிருக்கும் பொங்குதமிழ் இறுதிநாள் நிகழ்வில் - அரச திணைக்களங்களைச் சேர்ந்தவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டு, தமது உணர்வுகளின் வெளிப்பாடுகளைச் சர்வதேச சமூகத்திற்கும் மற்றும் அனைவருக்கும் காட்டவேண்டுமென, வவுனியா மாவட்ட பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர்.

இதேவேளை - பொங்குதமிழ் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று- நாளை வவுனியா மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில், கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில், வவுனியா மாவட்ட படையதிகாரிகளுக்கும், பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினருக்குமிடையே நடைபெற எற்பாடாகியுள்ளது. (03)



கொழும்பில் வருடாந்தம் நடைபெறும் பட்டம் ஏற்றும் போட்டி, கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது. இந்தப் போட்டியில் 600 சதுர அடி கொண்ட பாரிய பட்டம் ஒன்று ஏற்றப்பட்டது. முப்பதுபேர் ஏற்றிய இந்தப் பட்டத்தில், இளைஞர் ஒருவர் தொங்குவதைப் படத்தில் காணலாம். இந்தப்போட்டியில் 300 பட்டங்கள்வரை ஏற்றப்பட்டன.

### சட்டவிரோதமாக
## இத்தாலி செல்லவிருந்த பாகிஸ்தானியர்கள் தெமட்டகொடையில் பொலிஸாரால் கைது!

இத்தாலி செல்லவிருந்தவேளை, தெமட்டக்கொடையில் வைத்து பாகிஸ்தானியர்கள் - பத்துப்பேரைக் குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸார் இவர்களைக் கைதுசெய்யச் சென்றபோது, தப்பியோட முற்பட்டனர். இருந்தபோதும் இவர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

அண்மையில் சட்டவிரோதமாக இத்தாலி செல்லவிருந்த 254 பாகிஸ்தானியர்களுக்கு - நீர்கொழும்பு நீதிமன்றம் ஒவ்வொருவருக்கும் ஒருவருடச் சிறையும், 50,000 ரூபா தண்டப்பணமும் செலுத்துமாறு உத்தரவிட்டிருந்தது. ஆனால், பாகிஸ்தான் அமைச்சர்- இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து, இவர்கள் அனைவரும் சொந்த இடம் திரும்பிச்செல்ல, விமான ரிக்கற் வசதிசெய்து கொடுக்கப்பட்டுள்ளது. (01)

## குளத்திலிருந்து உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள வைரவப் புளியங்குளத்தில் உள்ள குளத்திலிருந்து உருக்குலைந்த நிலையிலுள்ள ஆணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் கொடுத்த தகவலையடுத்து வவுனியா பொலிஸார் இந்தச் சடலத்தினை மீட்டு வவுனியா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர். இதுவரை சடலம் அடையாளம் காணப்படவில்லை.

## மகிந்தானந்தவைக் கைதுசெய்ய கண்டிக்கு 3 பொலிஸ் குழுக்கள்!

கண்டிமாவட்ட சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேயை, கைதுசெய்ய கொழும்பிலிருந்து மூன்று பொலிஸ் குழுக்கள் கண்டிக்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க - கண்டியில் கூட்டமொன்றில் உரையாற்றச் சென்றபோது, அங்கு சென்ற ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களை- மகிந்தானந்த அளுத்கமகே அச்சுறுத்தியுள்ளார்.

இது சம்பந்தமாக, ஐக்கிய தேசியக் கட்சியினர் - கண்டிப் பொலிஸாரிடம் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தனர்.

ஆனால், மகிந்தானந்த அளுத்கமகே - தான் குற்றமற்றவர் எனச் சட்டமா அதிபரிடம் நிரூபித்துள்ளதால், கைதுசெய்யச் சென்ற பொலிஸார் - அவரை ஒன்றும் செய்ய முடியாதெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (01)

## துப்பாக்கியுடன் சிப்பாய் தப்பியோட்டம்

மாத்தளை மாவட்டத்திலுள்ள உக்குவளையிலுள்ள இராணுவ முகாமிலிருந்து இராணுவச் சிப்பாய் தப்பியோடியுள்ளார்.

இவர் - இரண்டு துப்பாக்கிகளுடன் தப்பியோடியுள்ளதாகப் பொலிஸ் நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த பன்னிரெண்டாம் திகதி இரவு களுத்துறையைச் சேர்ந்த சிப்பாய் ஒருவரே துப்பாக்கிளுடன் தலைமறைவானதாக இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அஷ்ரப் நினைவு தினத்தன்று முஸ்லிம் கட்சி பெயர் மாற்றம்!

(கொழும்பு)

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியின் பெயர் - சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவர் அஷ்ரப்பின் மூன்றாம் ஆணடு நினைவுதினத்துடன், ஐக்கிய முஸ்லிம் மக்களின் கூட்டமைப்பு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவர் -அஷ்ரப்பின் மூன்றாம் ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் நினைவு கூரப்பட்டது.

அஷ்ரப்பின் நினைவு தினமான் நேற்று முன்தினம் துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு, ஐக்கிய முஸ்லிம் மக்களின் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்திருந்தது.

முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி என்ற பெயருடன் இதுவரை காலமும் இயங்கிய அமைப்பு, அஷ்ரப்பின் மூன்றாம் ஆண்டு நினைவுதினத்திலிருந்து - ஐக்கிய முஸ்லிம் மக்களின் கூட்டமைப்பு என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டுகள் கழிந்த பின்னரும்கூட ஜனாதிபதி, பிரதமமந்திரி, ஹக்கீம் ஆகியோர்- அஷ்ரப்பின் மரணம் தொடர்பான விசாரணைகளை முடிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்காமலுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அஷ்ரப் இறந்தமை தொடர்பான காரணங்களைக் கண்டறிவதற்கு, உரிய நடவடிக்கைகள் இதுவரையும் எடுக்கப்படாதுள்ளது. இது தொடர்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி - ஐக்கிய முஸ்லிம் மக்களின் கூட்டமைப்பு அறிக்கை விடுத்துள்ளது.

### பூநகரி - கல்முனைப் பகுதியில்
# 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டதான தமிழர் குடியிருப்புக்கள் கண்டுபிடிப்பு

கடந்த ஒரு வாரகாலமாக கலாநிதி புஸ்பரட்ணம் தலைமையில் - யாழ்.பல்கலைக்கழக தொல்லியற்துறை மாணவர்கள் 18 பேர் ஒன்றிணைந்த குழு- பூநகரிப் பகுதியில் தொல்லியல் ஆய்வினை மேற்கொண்டு வருகின்றது. இந்த ஆய்வின் ஒருபகுதியாக, பூநகரி வட்டாரத்திலுள்ள கல்முனைக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது, 2300 வருடங்களுக்கு முற்பட்டவை என அறுதியிட்டுக்கூறத்தக்க தமிழரின் குடியிருப்பு பகுதி ஒன்று கண்டறியப்பட்டுள்ளது.

முதலில் கல்முனை கிராமத்துக் காட்டுப்பகுதியில் 8x4 அடி நீள, அகலத்தில் அகழ்வினை மேற்கொண்ட இக்குழுவினர் - பண்டைய குடியிருப்புக்குரிய தடங்கள் பரந்து காணப்பட்டமையினால், அகழ்வுக்குரிய அகழ்வுக்குழியினை 16x14 அடி நீள, அகலங்களில் விரிவுபடுத்திக் கொண்டனர்.

இந்த அகழ்வுக் குழியில் - நான்கு வேறுபட்ட மண் அடுக்குகளிலிருந்து, பல்வேறுபட்ட தொல்லியல் சின்னங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

மண்ணின் மேற்படையில் - பண்டைய பெண்தெய்வ உருவம் பொறிதத தமிழ் நாணயங்களும், வேறுபட்ட வடிவங்களில் செய்யப்பட்ட மட்பாண்டங்களும், அக்கால மக்கள் பயன்படுத்திய இரும்புக் கருவிகளும், மணிகள், கைவளையல்கள் போன்ற பல சின்னங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அவற்றுள் கண்டெடுக்கப்பட்ட நாணயங்களின் தோற்றக்காலம்- கி.மு 3 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையென நாணயவியல் அறிஞர்களால் வரையறை செய்யப்பட்டிருப்பதால், இந்நாணயங்கள் கண்டெடுக்கப்பட்ட கீழ்ப்படையிலுள்ள எச்சங்கள் - 2300 வருடங்களுக்கு முற்பட்டதெனக் கருதப்படுகிறது.

அவற்றின் ஒரு நாணயம்- அகழ்வாய்வு செய்யப்பட்ட குழிக்குள் இருந்து அகழ்வின்போது கண்டெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ஏனைய மூன்று மண்படைகளிலிருந்து பெருங்கற்கால பண்பாட்டுக்குரிய திராவிட மக்களின் கறுப்பு, சிவப்பு, நிற மட்பாண்டங்களும்-

நரைநிற, தனிக்கறுப்பு, சிவப்பு நிறத் தாலான சட்டிகள், வட்டில்கள், பானைகள், குவளைகள், தட்டில்கள் போனற பொருட்களும், அக்கால மக்கள் பயனபடுத்திய இரும்புக் கருவிகளான கொழுகத்தி, ஊசி, மீன்பிடி ஊசி போன்றவையும் சங்கு, சிப்பி போன்ற பொருட்களும், தமிழ் நாடு ஆதிச்சிய நல்லூர் பெருங்கற்கால பண்பாட்டுக்குரிய வேல்வடிவங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாக - பல மட்பாண்டங்களில் குறியீடுகளுடன், 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பண்டைய தமிழ் எழுத்துக்கள் கிடைக்கப்பட்டமையாகும். அவற்றுள் எழுதப்பட்ட பெயர்களுள் சில, தமிழில் ஆண்மகனைக் குறிக்கும் "ஆன்" என்ற விகுதியுடன் முடிவடைவதால், இங்கு வாழ்ந்த மக்கள் தமிழ்மொழி பேசிய மக்கள் என்பது உறுதியாகின்றது.

இந்த ஆய்வின்போது, கண்டுபிடிக்கப்பட்ட மிகமுக்கியமான மற்றுமொரு சான்று - நான்காவது மண் படையில், அதாவது இயற்கை மண்ணையடுத்து (Natural soial), குவாட்ஸ் (Quartz) எனப்படும் பளிங்கு போன்ற கல்லினால் வடிவமைக்கப்பட்ட கல்லாயுதமொன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கற்கருவிகள் - பநகரியிலுள்ள மண்ணித்தலை, வெட்டுக்காடு, மண்டக்கல்லாறு போன்ற இடங்களிலும், மாதோட்டம், பலாங்கொட போன்ற இடங்களிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றின் காலம் கி.மு.2800 ஆண்டுகள் எனவும், இப்பண்பாட்டுக்குரியவர் மகாவம்சத்தில் வரும் 'நாக இன மக்கள்' எனவும் - சிரான் தெரணியகல என்ற தொல்லியல் அறிஞரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், தென்னிந்தியாவில் உணவுற்பத்தியில் ஈடுபட்ட செம்புக்கால, பெருங்கற்கால, புதிய கற்கால பண்பாட்டுக்குரிய மக்களும், இவ்வாறன கருவிகளைப் பயன்படுத்தியமைக்கான சான்றுகள் இருப்பதனால், கல்முனையில் கண்டுபிடிக்கப்பட்ட இக்கருவிகள் எப்பண்பாட்டுக்குரியதெனத் திட்டவட்டமாகத் தற்போது கூறமுடியாதுள்ளதாகத் தெரியவருகிறது.

ஆயினும், அகழ்வாய்வின்போது- முதன்முதலாகப் இப்பிரதேசத்தில் இக்கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது -

தமிழ்ப்பிரதேசத்தின் தொன்மை பற்றிய ஆய்வில் ஒரு முக்கிய திருப்பம் என, ஆய்வினை மேற்கொண்டவர்கள் தெரிவித்தனர்.

யாழ்.பல்கலைக்கழக அனுசரணையுடன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வுகளுக்கு வேண்டிய நிதியுதவியை - யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன்- இவ்வாண்டுக்குரிய பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

ஆய்வுக்கு வேண்டிய போக்குவரத்து வாகன வசதிகளை - கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் பி.இராஜநாயகமும், சிரான் பணிப்பாளர் செல்வினும் வழங்கியிருந்தனர். இவ்வாய்வின்போது வயது, பால் வேறுபாடின்றி கல்முனை மண்ணித் தலை, வெட்டுக்காடு, வாழ் மக்கள் பெரும் ஆர்வத்துடன் பங்குகொண்டு, வேண்டிய பல உதவிகளைச் செய் துள்ளனர்.

தற்போது அகழ்வு செய்யப்பட்ட இடத்திற்கு மேற்கே, மேலும் இரு இடங்களில் பண்டைய குடியிருப்புக்களுக்குரிய சான்றுகள், தடயங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதால், அவ்விடங்களும் மழை காலத்திற்கு முன், அகழ்வு மேற்கொள்ளப்பட்டு, இவ்வாய்வின் முக்கியத்துவம் தொடர்பான அறிக்கை - உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்படும் எனவும், இவ்வாய்வுக்கு தலைமை தாங்கிச் சென்ற கலாநிதி ப.புஸ்பரட்ணம் தெரிவித்தார்.

# துப்பாக்கிச்சூட்டுப் பயிற்சியால் குடாநாட்டு மீனவர்கள் அச்சம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் வடமராட்சி மற்றும் தென்மராட்சி கரையோரப் பகுதிகளிலும், கடற்கரைப் பகுதிகளிலும் படையினர் மேற்கொண்டு வரும் துப்பாக்கிச்சூட்டுப் பயிற்சிகளால், மீனவர்கள் தமது தொழிலை மேற்கொள்ளமுடியாதநிலை ஏற்பட்டிருப்பதாக, மீனவர் சங்க வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது-

தென்மராட்சியில் கச்சாய், தம்ப தோட்டம் பகுதியில் அமைந்துள்ள இராணுவத்தின் 521 ஆவது பிரிகேட் தளத்தில், தினமும் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

யாழ்.குடாக் கடலேரி நோக்கி மேற்கொள்ளப்படும் துப்பாக்கிப் பயிற்சிகளால், மீனவர்கள் இந்தப் பகுதிக் கடலேரியில் மீன்பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

படையினர் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியை மேற்கொள்ளும்போது, இந்தப்பகுதியில் மீன்பிடிப்பது ஆபத்தானது என, மீனவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், பயிற்சி நடைபெறும் பகுதியில் மீன்பிடிப்பதற்குப் படையினரால் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை, காங்கேசன்துறை கடற்படைத்தளத்தை அண்டிய பகுதிகளிலும், வடமராட்சி கடற்பரப்புக்களை அண்டிய பகுதிகளிலும் கடற்படையினரும், இராணுவத்தினரும் துப்பாக்கிச்சூடு மற்றும் பீரங்கித் தாக்குதல் பயிற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர்.

கடற்படையினர் மற்றும் இராணுவத்தினர் மேற்கொண்டுவரும் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியால் - வடமராட்சி, தொண்டமனாறு, வல்வெட்டித்துறை போன்ற பகுதிகளில் இருந்து மீன்பிடிக்கச் செல்வதற்கு மீனவர்கள் அச்சமடைந்துள்ளனர்.

இதேவேளை, காரைநகர் கடற்படைத்தளத்தில் நடத்தப்படும் துப்பாக்கிச்சூட்டுப் பயிற்சிக்காக, ஒவ்வொரு சனிக்கிழமையும், அப்பகுதிகளில் மீன்பிடிக்கக் கடற்படையினர் தடைவிதித்திருப்பது குறிப்பிடத்தக்கது.



கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தினரால், அண்மையில் நெல்லை முருகன் திருமண மண்டபத்தில் சிறந்த புலமையாளர் பாராட்டு விழாவும், மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்கலும் நடத்தப்பட்டபோது - சங்கத்தின் செயலாளர் பு.இராதாகிருஷ்ணன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

## பளையில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு சேவாலங்கா நிறுவனம் தற்காலிக கொட்டகை

பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் -மீளக்குடியேறிய குடும்பங்களுக்கு, சேவாலங்கா நிறுவனம் தற்காலிக கொட்டகைகளை அமைத்துக்கொடுத்து வருகிறது.

மேற்படி நிறுவனத்தினரால், மீள்குடியேறிய மக்களில் வறுமைக் கோட்டின்கீழ் உள்ள 120 குடும்பங்கள் இனங்காணப்பட்டு, உடனடியாக பயன்படக்கூடிய வகையில் தகரக் கொட்டகைகள் வழங்கப்பட்டன.

முதற்கட்டமாக- இத்தாவில் அரசர்கேணி, கச்சாவெளி, பச்சையடி, தர்மக்கேணி, பேராலை ஆகிய இடங்களில் மேற்படி குடிசைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம் - தொடர்ந்து மேலும் சில பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (122)

## பேராதனைப் பல்கலைக்கழக கலை முதற்தேர்வு பரீட்சை 20 ஆம் திகதி ஆரம்பம்

(ஆழியவளை)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலை முதற்தேர்வு (GAQ) வெளிவாரிப் பரீட்சைகள், எதிர்வரும் 20 ஆம் `திகதி ஆரம்பமாகவுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகவிருந்த இப்பரீட்சை, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாகப் பிற்போடப்பட்டது.

இந்தப் பரீட்சைக்கான நேர அட்டவணை பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், பரீட்சார்த்திகள் முன்னைய அனுமதி அட்டையினையே பயன்படுத்தி, பரீட்சைக்குத் தோற்றவேண்டும் எனவும், வெளிவாரிப் பரீட்சைப் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (122)

# செயற்கைக் கால் தயாரிப்பு பொருட்கள் ஜெய்ப்பூர் நிறுவனத்திடம் ஒப்படைப்பு

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் - இந்த மாத இறுதியிலிருந்து, ஜெய்ப்பூர் நிறுவனத்திடம் செயற்கைக்கால் தயாரிக்கும் மூலப் பொருள்களையும், இயந்திரங்களையும் கையளிக்கவுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இதுவரை யாழ்ப்பாணத்திலுள்ள வலது குறைந்தவர்களுக்கும், புனர்வாழ்வுப் பணிகளுக்குமாக, ஜெய்ப்பூர் நிறுவனம் செய்துவந்த உதவிகளுக்கு வழங்கப்பட்ட தனது உதவிகளை முடித்துள்ளது.

1999 ஆம் ஆண்டிலிருந்து செஞ்சிலுவைச் சங்கம் - நவீன தொழில் நுட்பம், மூலப்பொருள்கள், பயிற்சி ஆகியவற்றை - ஜெயப்பூர் நிறுவனத்திற்கு வழங்கிவந்தது.

இந்தமாத இறுதியில் இந்தப் பணிகளைச் செஞ்சிலுவைச் சங்கம் நிறுத்தி, முழுமையாக இந்தப் பணிகளை ஜெய்ப்பூர் நிறுவனம் செய்வதற்கு வழியேற்படுத்திக் கொடுத்துள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாக இந்தத் துறையில் நன்கு பயிற்சிபெற்ற, வெளிநாட்டவர் ஒருவரும், இரு இலங்கையரும் இணைந்து, பாதிக்கப்பட்ட 800 வலது குறைந்தவர்களுக்கு, மீண்டும் செயற்கைக்கால்களைப் பொருத்துவதற்குச் செஞ்சிலுவைச் சங்கம் உதவிபுரிந்துள்ளது.

A-9 கண்டி வீதி- கடந்த ஆண்டு திறக்கப்பட்டதிலிருந்து, வன்னியில் கால் இழந்தவர்களும், இந்த நிறுவனத்தில் செயற்கைக்கால்களைப் பொருத்திக் கொள்ளமுடிந்தது.

கடந்த சில வருடங்களாக இணுவில் பிரதேசத்தில் இயங்கி வந்த, இந்த நிறுவனம் - தற்போது யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

## விவசாயத் திணைக்களத்தால் சிறந்த விவசாயிகளாக இவ்வாண்டு தெரிவானோர்!

(யாழ்ப்பாணம்)

விவசாய உற்பத்தித் திணைக்களத்தினால், வருடந்தோறும் சிறந்த விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டு, பணப் பரிசில்கள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு - இந்த ஆண்டுக்கான சிறந்த விவசாயிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். நெற்செய்கை உப உணவு, வதிவிட வேளாண்மை ஆகிய துறைகளிலேயே, இவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக, மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை தெரிவித்துள்ளார். தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளின் பெயர் விபரம் வருமாறு -

**நெற்செய்கை -**

ஐயம்பிள்ளை வைத்திலிங்கம் (நெடுந்தீவு), வேலாயுதம் ஞானேஸ்வரி (காரைநகர்), ஐயாத்துரை மாரிமுத்து (அரியாலை), பொன்னையா குகானந்தன் (சுழிபுரம்), கதிரித்தம்பி தம்பையா (பெரியவிளான்), பொன்னுத்துரை தங்கவேல் (உடுவில்), கந்தையா சிவதாசன் (நீர்வேலி), கந்தையா மயில்வாகனம் (புத்தூர்), வேலாயுதம் கதிர்காமநாதன் (கைதடி), தம்பையா கஜேந்திரன் (வரணி), கணபதிப்பிள்ளை இராமநாதன் (புலோலி), கனகசபை சற்குணராஜா (குடத்தனை).

**உப உணவு -**

நாகமணி முத்துலிங்கம் (நயினாதீவு), நாவுக்கரசு விவேகானந்தராசா (வேலணை), தம்பித்துரை கனகசபை (கோண்டாவில்), சிவநாயகம் சிதம்பரலிங்கம் (மூளாய்), சின்னத்தம்பி தவராசா (மாதகல்), மகாதேவன் பிரேமதாஸ் (உடுவில்), முத்துலிங்கம் நவரத்தினம் (உரும்பிராய்), விநாசித்தம்பி செல்வராசா (நீர்வேலி), சேனாதிரர்சா லிங்கநாதன் (கைதடி), செல்லையா இராமலிங்கம் (சாவகச்சேரி), கதிரவேலு சின்னத்துரை (கரவெட்டி), நவரத்தினம் பரமேஸ்வரி (செம்பியன்பற்று).

**வதிவிட வேளாண்மை -**

நாகமுத்து சண்முகராசா (புங்குடுதீவு), யுவராஜ் யுதர்சன் (புளியங்கூடல்), மனோகரன் உதயகுமாரி (கொழும்புத்துறை), வயிரமுத்து ஜீவரத்தினம் (வட்டுக்கோட்டை), முத்தையா சேனாதிராசா (அளவெட்டி), சண்முகம் வைத்தீஸ்வரன் (ஏழாலை), கதிரேசு வைரவநாதன் (நீர்வேலி), இராசரத்தினம் இலட்சுமணர் (நீர்வேலி), வல்லிபுரம் மகாலிங்கம் (மட்டுவில்), குமாரசாமி முகுந்தன் (மட்டுவில்), நடராசா பாஸ்கரசோதி (பொலிகண்டி), முருகேசு கந்தசாமி (வத்திராயன்).

## கூட்டுறவுச் சங்கத்திற்கு இயக்குநர்சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு - மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கு புதிய இயக்குநர்சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த தெரிவின்போது தலைவராக ச.தியாகராசா தெரிவுசெய்யப்பட்டார். (09)

## பொதுக்கூட்டம்

கந்தரோடை மேற்கு ஞானவைரவர் சனசமூக நிலையத்தின், ஆண்டுப் பொதுக்கூட்டம்- நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு தலைவர் இ.முருகையா தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்ட முடிவில் புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளது. இந்த நிர்வாகிகள் தெரிவில் இளைஞர்கள் நிர்வாகத்தினைப் பொறுப்பேற்கவுள்ளதாகத் தெரிய வருகிறது. (42)

## உதைப்பந்தாட்ட இறுதிப்போட்டி

தெல்லிப்பளை கல்விக்கோட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் - உதைபந்தாட்ட சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டிகள் யாவும், நாளை பி.ப. 2 மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் நடைபெறவுள்ளன. பங்குபெற்றும் பாடசாலைகள் வருமாறு.

14 வயதுப் பிரிவு

அளவெட்டி அருணோதயாக் கல்லூரி - தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி.

16 வயதுப் பிரிவு

இளவாலை மெய்கண்டான் - அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

18 வயதுப் பிரிவு

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி - வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

## முள்ளி வாய்க்கால் கனிஷ்ட வித்தியாலயத்தில் அடிப்படை வசதிகளின்றி மாணவர்கள் அவதி

(முல்லைத்தீவு)

முள்ளி வாய்க்கால் மேற்கு கனிஷ்ட வித்தியாலயத்தில் - குடிநீர் வசதி, மலசலகூட வசதியின்றி மாணவர்கள் பெரும் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஐந்து வருடங்களாக - இடிந்துபோன கிணறு இதுவரை புனரமைக்கப்படவில்லை. இதனால், இந்தப் பாடசாலை மாணவ, மாணவிகள் குடிநீரைப் பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இந்தப் பாடசாலையில் மலசலகூட வசதியில்லாமல், மாணவர்கள் பெரும் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)


வாழ்க வளமுடன்




முதலாவது அகவையில்

பெயர் : ம.கேதுஷன்
முகவரி : காளி கோயிலடி, வட்டுக்கோட்டை.



மூன்றாவது அகவையில்



பெயர் : ச.ம.மரியஜெனீபர்
முகவரி : 11 ஆம் வட்டாரம், நெடுந்தீவு..

ஐந்தாவது அகவையில்

பெயர் : ப.மதனிகா
முகவரி : கச்சாய் வீதி, 2 ஆம் கட்டையடி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



-------------------
பெற்றார் ஒப்பம்




# இணையம் ஆளும் இன்றைய உலகம்

(சென்றவாரத் தொடர்ச்சி)

இனிநாம் **Domain** கள் பற்றி நோக்குவோம். இன்று பல்வேறுபட்ட **domain** கள் காணப்படுகின்றன. இவை வர்த்தகம், கல்வி, நிறுவனம், நாடுகள் என்பன சார்ந்ததாகவும் காணப்படுகின்றன. அவையாவன -

பொதுவானவை **(Comman)**
**com - Comercial Enterprice** (வர்த்தகம் சார்ந்தவை)
**edu - Educational Institution** (கல்வி சாந்தவை)
**org - Organizations** (அமைப்பு சார்ந்தவை)
**gov - Government** (அரசு சார்ந்தவை)
**mil - Military** (இராணுவம் சார்ந்தவை)
**net - Network**

என்பவையும், விசேடமாக நாடுகளைக் குறிக்கும். **Domain** களும் காணப்படுகின்றன. அவையாவன -

**lk - Srilanka**
**in - India**
**ca - canada**
**uk - united kingdom**
**de - Germany**
**jp - Japan**

என்பவற்றினையும் கூறலாம்.

இதனைத் தொடர்ந்து நாம் பார்க்கப்போவது இணையத்தில் உங்களுக்கு தேவையான தகவல்களை எவ்வாறு இலகுவாகப் பெற்றுக்கொள்வது என்பதாகும்.

நீங்கள் புதிய நகரம் ஒன்றிற்குச் சுற்றுலா செல்வதாயின், அந்த நகரத்தின் வீடுகளின் அமைப்புக்கள், முக்கிய இடங்கள் போன்ற விடயங்களை, ஒரு சுற்றுலா அமைப்பிடம் இருந்தோ அல்லது அந்த நகர வரைபடத்தை வாங்குவதன் மூலமோ நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

இதேபோன்று, இணையத்தில் உங்களுக்குத் தேவையான தகவல்களைக்கொண்ட, இணையப் பக்கத்திற்குச் செல்ல வேண்டுமாயின், நகரில் இருக்கும் சுற்றுலா அமைப்பு போன்று, இணையத்திலிருக்கும் சில **web** பக்கங்களுக்குச் சென்று, அவற்றின் உதவியுடன் உங்களுக்குத் தேவையான **website address** ஐ நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு தகவல்களைப் பெற்றுக்கொள்ள பின்வரும் இருமுறைகள் காணப்படுகின்றன.

1. **Internet Directory Tools**
2. **Internet Search Engines**

**Internet Directory Tools** ஆனது **web** பக்கங்களை வகைப்படுத்தி, அவற்றை ஒரு ஒழுங்குமுறையில் வைப்பதே இதன் நோக்கமாகும். இப்படி வகைப்படுத்தப்பட்டிருக்கும் **web** பக்கங்களில் நாம் எமக்குத் தேவையான தகவல்ளைக் கொண்டிருக்கும் **web** பக்கங்களை இலகுவாகத் தேடிக்கண்டுபிடிக்கலாம்.

உதாரணமாக- எமக்குக் கல்வி தொடர்பான தகவல்கள் வேண்டுமாயின், நேரடியாகக் கல்வி தொடர்பான **web** பக்கத்திற்குச் சென்று, அங்கே எமக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். இப்போது நாம் இலங்கையில் உள்ள யாழ்.பல்கலைக்கழகத்துக்குச் செல்ல வேண்டுமாயின் இணையத்தில் இருக்கும் பிரபல்யமான **web Directory** ஆன **YAHOO** இற்குச் சென்று, பின்வரும் ஒழுங்கில் **Directory** களைத் தெரிவுசெய்வதன் மூலம், யாழ்.பல்லைக்கழக **web site** இற்கு இலகுவாகச் செல்லாம்.

**Regional**
**Countries**
**Srilanka**
**Education**
**Higher Education**
**University of Jaffna.**

மேலே சொல்லப்பட்ட உதாரணத்தின் மூலம் **Internet Directory** எப்படி ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன என்று உங்களுக்கு ஓரளவிற்குத் தெளிவாகியிருக்கும். எனினும், **web Directory** களை எவ்வளவு அதிகமாக உபயோகிக்கின்றீர்களோ, அதற்கேற்றவாறு அவை பரீட்சையமாகவே இருக்கும்.

**Internet Search Engines** இவை **Internet Directory Tools** ஐ போன்று **Website** களை வகைப்படுத்தி வைத்திருப்பதில்லை. மாறாக இவை இணைத்திலிருக்கும் இணையப் பக்க முகவரியையும், அப்பக்கத்திலுள்ள விடயங்களில் சில முக்கிய சொற்களையும் **(Key Words)** ஒரு தகவல் பட்டியலாகச் சேமித்து வைத்துக்கொள்கின்றன.

நாம் எமக்குத் தேவையான விடயத்தினை இந்த **Search Engines** களுக்குக் கொடுத்தால், அவை தமது தகவல் பட்டியலில் எமது விடயத்துக்கு ஒத்ததாக இருக்கும் எல்லா **Web** பக்கங்களையும் (முகவரி) எமக்குத் தருகின்றன.

உதாரணமாக- இலங்கையிலுள்ள கொழும்புப் பல்கலைக் கழகத்தின் **Website** இற்குச் செல்லவேண்டுமாயின், இணையத்தில் மிகவும் பிரபலமான **Search Engines** ஆன **Altavista** வுக்குச் சென்று, அங்கே **"Colombo University"** என ரைப் செய்ய வேண்டுமாயின், அந்த தேடற்பொறி தனது தகவல் பட்டியலில் **"Colombo University"** என்ற சொல்லுக்கு ஒத்ததாகவுள்ள அனைத்து முகவரியையும் எமக்குத் தரும்.

இதுவரை நாம் **Internet** ஐ எவ்வாறு கையாள்வது என்பதைப் பற்றி மேலோட்டமாகப் பார்த்தோம். இனிநாம் பார்க்கப் போவது இணையத்தினுள் உள்ளடங்கியுள்ள தகவல் பொதிகளை ஆகும்.

### கல்வி

தொழிற்கல்வி, மொழி, விஞ்ஞானம், தொழில்நுட்பம், வாழ்க்கைக் கல்வி என எமக்கு என்ன தேவையோ, அத்தனை விதமான கல்வி வசதிகளும் காணப்படுகின்றன.

**WWW (World Wide Web)** இன் ஊடாகக் கல்வி கற்கும் இந்த முறையை - **Online Education** என அழைப்பர். இந்த **Online Education** ஆனது குழந்தைகளுக்கான ஆரம்பக்கல்வியிலிருந்து, பட்டதாரிகளுக்கான மேற்படிப்புவரை காணப்படுகின்றன. இவ்வாறான பக்கங்கள் அநேகமாக, இலவசமாக எல்லோராலும் உபயோகப்படுத்தக்கூடியவையாகும்.

### நூலகம்

நூலகங்கள் **(Online Libraries)**, கலைக்களஞ்சியங்கள் **(Online Encyclopedias)**, நூதனசாலைகள் **(Online Museum)**, விஞ்ஞானம், அறிவியல் சஞ்சிகைகள் **(Online Sceience and Technology Magazines)** என்று பல அறிவியல் சார்ந்த நூலகங்கள் உண்டு. இதன் மூலம் பாடசாலை மாணவர்கள்- தங்கள் ஆய்வுகளுக்கு **(Research Projects)** தேவையான விடயங்களை இலகுவாகப் பெறலாம்.

### செய்தி

உலகின் எந்த மூலையில் நடைபெறும் என்ன விதமான செய்தியானாலும் சரி, அவற்றை உடனுக்குடன் பெறலாம்.

உலகின் எல்லா சர்வதேச ஸ்தாபனமும் இன்று தமக்கென ஒரு **web** பக்கத்தை அமைத்து, அவற்றினூடாகச் செய்திகளை உடனுக்குடன் எமக்குத் தந்து கொண்டிருக்கின்றன.

உதாரணமாக

**BBC - http:\\news .bbc.co.uk**
**AFP - http:\\www.afp.com**

இவை மட்டுமன்றி, பல செய்தித்தாபனங்கள் இலங்கை தொடர்பான செய்திகளை மட்டுமே தருவததெற்கென்று **web site** களை அமைத்துள்ளன.

உதாரணமாக,

**Tamil net - WWW.tamilnet.com**

இவை மட்டுமன்றி, இன்று அநேகமான பத்திரிகைகள்கூட ஒரு வெப்பக்கத்தை அமைத்து, அச்சடித்த பத்திரிகையில் இருக்கும் அதே விடயங்களை, **Internet** ஊடாக எமக்கு அறியத்தருகின்றன. இவ்வாறு வெளிவரும் பத்திரிகைகள்- இணையப் பிரதி **(Online Version or Internet Version)** என அழைப்பர். இதற்கு உதாரணமாக, நமது ஈழநாடு, **Daily News, Sunday Times** போன்ற பத்திரிகைகளைக் குறிப்பிடலாம்.

உதாரணமாக: நமது ஈழநாடு - **www.eezhanadu.com**

### பொழுதுபோக்கு

எமது பொழுதுபோக்குச் சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, சஞ்சிகைகள், சதுரங்கம் போன்ற உள்ளகப் பொழுது போக்கு விளையாட்டுக்களையும் இவற்றைவிட நாம் தினமும் செய்யும் பொழுதுபோக்கு சம்பாசனைகள் மற்றும் எல்லாவிதமான பொழுது போக்குகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது இந்த இணையமாகும்.

### சம்பாசனை (Chat)

**Internet Chat** (இணைய உரையாடல்) என்பது உலகில் எல்லாப் பாகங்களிலும் இருக்கும் இணையப் பாவனையாளர்கள் - கணினி ஊடாக ஒரு இடத்தில் சந்தித்து, கணினி விசைப்பலகையை **(Computer Keyboard)** அழுத்துவதன் மூலம், தமது கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதாகும்.

இணைய உரையாடல் மூலம்- தொழில்சார்ந்த, கல்வி சார்ந்த பல விடயங்களை உலகின் எல்லாப் பாகங்களிலும் இருப்பவர்களுடன் கலந்துரையாட முடியும். அத்துடன், உலகின் பல்வேறுபட்ட வேற்றுக் கலாசார, சமூகத்தைச் சேர்ந்தவர்களுடன், நட்பை ஏற்படுத்திக்கொள்ளவும் இந்த இணைய உரையாடலானது பெரிதும் உதவுகின்றது. ஆனால், இவை தீய நோக்கங்களிற்கும் பயன்படுத்தப்படுகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இன்று இளைஞர்களையும், முதியவர்களையும் ஆட்டிப்படைக்கும் ஓர் நோயாக இணைய உரையாடல் வளர்ச்சி கண்டுள்ளதுடன், இதன்மூலம், பல இளைஞர்கள் பணத்தினையும், நேரத்தினையும் வீண் விரையமாக்குவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

### வங்கிகளும் வணிகமும்

இன்று பணமானது - உலோக நாணயங்கள், அச்சுக் காசுகள், பிளாஸ்ரிக் காட்டுகள் (கிரெடிற் காா்ட், பாங் காா்ட்) காசோலைகள் மற்றும் எழுத்து வடிவிலான பத்திரங்கள் போன்ற பல்வேறு வடிவங்களில் எம்மைச் சூழ்ந்திருக்கின்றன. இப்படியெல்லாம் உருவெடுத்திருக்கும் இந்தப் பணமானது - **Internet** வருகையால் **E-Cash, Virtual Money** என உருவமே இல்லாத ஒன்றாக உருமாறிக் கொண்டிருக்கின்றது. பணம் மட்டுமல்லாது, பணத்தைச் சேமித்து வைக்கும் வங்கிகள்கூட, இன்று உருவமில்லாத **Virtual Internet Bank** ஆக மாறிக்கொண்டிருக்கின்றன.

வங்கிகளுக்குச் சென்று, நாம் செய்யும் அனைத்து வேலைகளையும் (உலோக அல்லது அச்சடித்த பணத்தைப் பெறவதைத் தவிர) இன்று வீட்டில் இருந்தபடியே, **Internet** ஊடாக இலகுவாகச் செய்யக்கூடியவாறு இன்றைய **Internet** தொழில்நுட்பமானது வளர்ச்சியடைந்துள்ளது.

உதாரணமாக -எமது வங்கிக் கணக்கைப் பராமரிப்பது, சிட்டைகளுக்குப் பணம் கட்டுவது **(Bill Payments),** கிரெடிற் காட்டுகளுக்கு (கடன் அட்டை) பணம் கட்டுவது போன்றவற்றைக் கூறலாம்.

இப்படி **Internet** ஊடாகச் செய்யும் வங்கி தொடர்பான வேலைகளை, **Online Banking** என அழைப்பர். அநேகமான எல்லா வங்கிகளும், இன்று **Online Banking** சேவையை அறிமுகப்படுத்தியுள்ளன. இன்று யாழ்ப்பாணத்திலுள்ள பல



அரச -தனியார் வங்கிகள் இச்சேவையினை வழங்குவதைக் காணலாம்.

### மின் வர்த்தகம் (E-Commerce)

வங்கிகள் மட்டுமல்லாது, வியாபார நிறுவனங்கள்கூட இணையத்தினூடாகப் பொருட்களை விற்பனை செய்கின்றன. இவ்வாறு இணையத்தினூடாகச் செய்யும் வியாபாரத்தை **E-Commerce** என அழைப்பர். இந்த மின்வர்த்தகமானது - இன்று மிகப்பெரிய வியாபாரச் சந்தையாக உருவெடுத்துள்ளது.

உலகின் எந்த மூலையிலிருக்கும் ஒருவரும், எல்லா நாடுகளிலுமுள்ள வர்த்தக நிறுவனங்களிடமிருந்து, பொருட்களைத் தமது வீட்டில் இருந்தபடியே கொள்வனவு செய்யலாம். உதாரணமாக - அமெரிக்காவிலுள்ள ஆடை தைக்கும் ஒரு நிறுவனத்திடம் - யாழ்ப்பாணத்திலுள்ள ஒருவர், தனக்கு விரும்பிய ஆடையைத் தன்வீட்டுக் கணினியூடாக ஓடர் செய்யலாம்.

இப்படி இணையத்தினூடாகப் பொருட்களை வாங்கும் போது, நாடுகளுக்கிடையிலான நாணயப் பெறுமதி வித்தியாசம், ஒரு பெரும் தடையாக இருக்கின்றது. அதற்காகத் தான் **e-cash** அல்லது **Virtual money** என்று பணத்திற்கு ஒரு புதிய பரிமாணத்தைக் கொடுத்துள்ளார்கள்.

(தொடரும்)

**எஸ்.ஜெயானந்தன்**
விரிவுரையாளர் (வருகை), யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி.

## தொழில் வங்கி



| | |
|---|---|
| நிறுவனம் | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் (கொழும்பு - 03) |
| வெற்றிடமாகவுள்ள பதவிகள் | 1. முகாமையாளர் - சந்தைப்படுத்தல் தரம் m 11<br>2. ஆய்வு அலுவலர் |
| அடிப்படைத் தகுதி | 1. சந்தைப்படுத்தல் பட்டதாரி அல்லது அவை சார்ந்த ஏதாவது துறைகள்<br>அல்லது<br>சந்தைப்படுத்தலில்/ அவை சார்ந்த துறைகளில் பட்டப்பின் படிப்புகள் அத்துடன், 10 வருட துறைசார் அனுபவம்.<br>வயதெல்லை: 35 - 45<br>2. விவசாய பட்டதாரி அல்லது அதற்கு இணையான தகுதிகளுடன் 2 வருட அனுபவம்.<br>வயதெல்லை: 30 - 40 |
| விண்ணப்ப முடிவு திகதி | 26.09.2003 |

**தொழில் வங்கி தொடர்பான மேலதிக தகவல்களைப்பெற விரும்புவோர் - 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நேரில் வந்து பார்வையிடலாம்.**

# உள்ளூர் கைத்தொழிலாளர்களை வெளிக்கொண்டுவரும் கண்காட்சி

வட-கிழக்கு மாகாண. கைத்தொழிலாளர்களை ஊக்குவிக்கும் முகமாக, கண்காட்சி நிகழ்வு ஒன்று- எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இது எமது மாவட்ட கைத்தொழிலாளர்களுக்குப் பெரிதும் பயனுடையதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களம், யாழ். மாவட்ட சிறிய நுண்பாகக் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து, இக் கண்காட்சி நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது. அத்தோடு, இந்த நிகழ்வில் பொருட்களைக் காட்சிப்படுத்த- உற்பத்தியாளர்களிடையே போட்டி ஒன்றையும் நடத்தி, பரிசில் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் என்பதில் ஐயமில்லை.

இலைமறை காயாக இருக்கும், தரம்மிக்க பல உற்பத்தியாளர்களை இந்தக் கண்காட்சி அறிமுகப்படுத்தி, அவர்களைத் தேசியமட்டம்வரை அறிமுகப் படுத்தக்கூடிய வாய்ப்புக்களும் உள்ளது.

இந்தக் கண்காட்சியில் - சாதாரண குடிசைக் கைத்தொழில்-கைவினைப் பொருட்கள், சட்டி, பானைமுதல் உயர்தரம் மிக்க கணினி உதிரிப்பாகங்கள்வரை காட்சிப்படுத்தப்படவுள்ளமை கவனிக்கத்தக்க விடயமாகிறது. எனவே, ஊற்பத்தியாளர்கள் - தமது எந்தத் தரம்மிக்க உற்பத்திப் பொருட்களையும், இந்தக் கண்காட்சியிலே காட்சிப்படுத்த முடியும். ஐசிங் கேக், அழகுபடுத்தும் கலை என்பனகூட அடங்கும்.

செய்முறை விளக்கங்களைக்கூட உற்பத்தியாளர்கள்- நுகர்வோருக்குச் செய்துகாட்டக்கூடிய வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவை யாவற்றிற்குமே கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது. முற்றிலும் இலவசமாக எமது கைத்தொழிலாளர்களை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தும் களமாகவே இந்தக் கண்காட்சி அமைந்துள்ளது.

இந்தக் கண்காட்சியில் - தமது பொருட்களைக் காட்சிப்படுத்த விரும்புவர்கள், யாழ்.செயலகத்தில் இயங்கும் மாவட்ட தொழிற்துறைத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு, மேலதிக விபரங்களைப் பெறமுடியும். நல்லதொரு வாய்ப்பை நழுவவிடாது, எமது கைத்தொழிலாளர்கள் பயன்பெற வேண்டும் என்பதே எல்லோருடைய எதிர்பார்ப்பாகும்.

# வாடிக்கையாளரின் நன்மை கருதியே

**புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் குடாநாட்டில் பல நிறுவனங்கள் தமது கால்களை அகலப் பரப்பிவருகின்றன. அதற்கு முயற்சித்தும் வருகின்றன. அத்தகையதொரு நடவடிக்கையாக கொமர்ஷல் வங்கி தனது இரு கிளைகளை சுன்னாகம், நெல்லியடி ஆகிய இடங்களில் திறந்துள்ளது. இந்த வங்கிக் கிளைகளின் திறப்பு விழாவுக்காக யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அமித குணரட்ணவை வங்கியின் செயற்பாடு தொடர்பாக செவ்வி கண்டோம். அவரோடு சந்தைப்படுத்தல் முகாமையாளர் ரிச்சட் ரொட்றிக்கோ, கொமர்ஷல் வங்கியின் யாழ். நகரக் கிளை முகாமையாளர் ரவீந்திரா ஆகியோரும் உடனிருந்தனர்.**



செப்ரெம்பர் 12 ஆம் திகதி கொமர்ஷல் வங்கியின் கிளை, சுன்னாகத்தில் திறக்கவிருக்கும் தகவலை அறிந்ததும், அந்த வேளையில் அங்குவரும் உயரதிகாரிகளை பேட்டிகாண வேண்டுமென்று எண்ணமும் எமக்குள் உதித்துவிட்டது. இதனால், முன்னதாகவே தொலைபேசி மூலமாக தொடர்புகளையும் அதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டோம்.

நாங்கள் வங்கியை அடைய வங்கித் திறப்பு விழா நடைபெற ஆயத்தங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. மங்கள வாத்தியங்களோடு விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டு வங்கியின் தலைவர் அமர சூரியாவினால் நாடாவெட்டி வங்கி திறந்துவைக்கப்பட்டது.

பின்னர் சில பெரியவர்களின் உரைகள், அதனையடுத்து சிற்றுண்டி விருந்து, அதை முடித்துக்கொண்டு நாம் வந்த வேலையைக் கவனிக்க உரியவர்களோடு தொடர்புகொண்டு ஆயத்தங்களை மேற்கொண்டோம்.

முதலில் எம்மை சம்பிராதய பூர்வமாக அறிமுகம் செய்த பின்னர், குளிரூட்டப்பட்ட அறையினுள் எமது கேள்விகளை தொடுக்கிறோம்.

**இருபது வருடங்களுக்கு மேலாக போர் நடந்த போதும் யாழ்.மண் தற்போது சமாதான காற்றைச் சுவாசிக்க ஆரம்பித்தாலும், அது நிலைக்குமா என்ற ஐயம் நிறையவே உள்ளது. இந்த வேளையில், தாங்கள் புதிதாக இரு கிளைகளை ஆரம்பித்துள்ளமை வெற்றி என கூறமுடியுமா என்றபோது, அமித குணரட்ண -**

உண்மையிலேயே யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையிலே, நாம் தீர்மானித்தோம், யாழ்ப்பாணக் கிளையை நவீன மயப்படுத்தி, மேலும் பல கிளைகளைத் திறந்து மக்களுக்குச் சேவை புரியவேண்டும் என்று. நான் நினைக்கிறேன் 2001 ஆம் ஆண்டு டிசம்பர் மாத காலப்பகுதியில், புதிய அரசு உருவானது.

அதன் பின், யாழ்ப்பாணத்துக்கு தரைவழியாக வரக்கூடிய சூழ்நிலை உருவானது. செய்மதி உதவியுடன் Cat கணினி அமைப்பினூடாக யாழ்ப்பாணக் கிளையை ஏனைய கிளைகளுடன் இணைக்கக் கூடியதாக இருந்தது. அதன் மூலம் யாழ்ப்பாணத்தில் அதி நவீனமயப்படுத்தப்பட்ட சேவையை வழங்கும் வங்கிகளில் ஒன்றாக நாம் இருக்கிறோம்.

அது மட்டுமன்றி, இருபது வருடங்களாக யுத்தம் முடிவுக்கு வருமென்று பார்த்துக்கொண்டிருந்தோம். அது சாத்தியப்படவில்லை. ஆனாலும், 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத காலப்பகுதியில் தீர்மானித்தோம், எவ்வகையிலும் எமது யாழ்ப்பாணக் கிளையினை ஏனைய கிளைகளுடன் இணைத்து, தென்பகுதியிலுள்ள வாடிக்கையாளர்களைப் போன்று, இந்தப் பிரதேச வாடிக்கையாளர்களையும், வங்கிகளினூடாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடியதாக உருவாக்க வேண்டுமென்று. இன்று யாழ். வாடிக்கையாளர்கள் ஏனைய பிரதேச வங்கிகளுடன் மட்டுமன்றி, வெளிநாடுகளில் கூட எமது CAT காட்டினைப் பாவித்துப் பணத்தைப் பெறும் வாய்ப்புக்கள் உள்ளதாகத் தனது பதிலை நிறைவு செய்தார்.

**தாங்கள் எமது மக்களின் தேவையைக் கருத்திற்கொண்டு செயற்படுவதாகக் கூறுகின்றீர்கள். அப்படியானால், எவ்வகையான தேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கத் தீர்மானித்துள்ளீர்கள் எனக் கேட்டபோது, அதற்கு அமித -**

ஆம். சேமிப்புச் சேவை என்ற வகையில், சிறியோர் முதல் பெரியோர் முதல் சிறந்த வட்டி வீதத்தினைப் பெறக்கூடிய சேமிப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளோம். அதைவிட, இலங்கையின் முதன்முறையாக "மணி மாக்கற்" என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

இந்தத் திட்டத்தில் வட்டி வீதம் மாறிக் கொண்டேயிருக்கும். கூடுதலான வட்டியினைப் பெற வாய்ப்புண்டு. மற்றும் கடன் திட்டங்கள் என்னும்போது, கட்டுமானப் பணிக்கான கடன் திட்டம், தொழில் அபிவிருத்திக்கான கடன் திட்டம், குறைந்த வட்டியில் நீண்ட காலக் கடன் போன்ற திட்டங்களே வழங்கிறோம், என்றார்.

# அதி நவீன மயமாக்கப்பட்ட சேவை

**வடபகுதி மக்கள், தங்கள் வங்கியில் கடனைப் பெறுவது கடினமாக இருப்பதாகவும், ஆனால் தென்பகுதி மக்களுக்கு அவ்வாறான கஷ்டம் இல்லையெனவும், எமது மக்கள் குறைப்படுகிறார்கள். இது சம்பந்தமாகத் தங்களின் கருந்து என்ன? என்று கேட்டபோது**

இதுவரை காலமும் வடபகுதியில் - எமது கடன் திட்டங்களைச் செயற்படுத்த முடியாதது வேதனைக்குரியது தான். அதற்குக் காரணம் - இந்தப் பகுதியில் நீதிமன்றம், காணிப் பதிவுக் கந்தோர் போன்ற நிறுவனங்கள் செயலிழந்து இருந்தமையாகும். அதனால், எமது கடன் திட்டங்களைப் பெறவரும் மக்கள் உரிய ஆவணங்களைப் பெறுவது கடினமாக இருந்தது. ஆனால், தற்போது அந்தச் சூழ்நிலை மாறிவருகிறது.

உண்மையில் இருபது வருட கால யுத்தத்தால், வடபகுதி மக்கள் பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மீண்டும் அவர்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு, எமது கடன் திட்டத்தினூடாக சந்தர்ப்பம் வழங்கவுள்ளோம். அதனை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

**அந்த வேளையில், எமது மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினையான கேள்வியைத் தொடுத்தோம்.**

**தங்களிடம் கடன் பெறவரும்பொழுது, கூடுதலான பாதுகாப்பு ஆவணங்களைக் கோருவதால், மக்கள் இடர்களை எதிர்நோக்குகிறார்கள். அது சம்பந்தமாக தாங்கள் கூற விரும்புவது யாது?**

ஆம், நாம் கடன் கொடுக்கும் போது, கடன் பெறுவோர் அவரால் கடனைத் திருப்பி தரமுடியுமா என்பதினை ஆவணங்கள் மூலம் பரிசீலிப்போம். அவரால் கடனைத் திருப்பிச் செலுத்தமுடியாதிருத்தல் ஏற்படும் வேளையில், கடனுக்காக ஒரு பாதுகாப்புப் பிடிமானத்திற்காகச் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களை உறுதிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. ஏனெனில், நாம் கடன் பெறுவோருக்குக் கொடுக்கும் பணம், எமது வாடிக்கையாளர்களின் சேமிப்பே. இந்தப் பணத்தை எமது வாடிக்கையாளர்கள் எமது பாதுகாப்பிலேயே வைத்துள்ளார்கள்.

அவர்களின் பணத்தைப் பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு எமக்குண்டு. எனவேதான், கடனை அறவிட வேண்டிய முன் எச்சரிக்கையுடன் தேவையான ஆவணங்களைக் கோருகின்றோம் என, தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

**குறைந்த வட்டியில் வீடமைப்புக் கடன்கள் எதையாவது வழங்குகின்றீர்களா என வினவிய போது,**

ஆம், எமது வங்கியால் 'நிவஹண' என்ற வீடமைப்புக் கடன் திட்டம் உள்ளது. இந்தக் கணக்கிற்கான வட்டி வீதம் எதிர் காலத்தில் குறையக்கூடிய சாத்தியமுள்ளது. அதைவிட 'சகணய' என்னும் இலகு கடன் திட்டமுள்ளது. அதை நாம் தென் பகுதியில் நடைமுறைப்படுத்திக் கொண்டு வருகிறோம். வட பகுதிக்குப் படிப்படியாக வழங்கத் தீர்மானித்துள்ளாம் என்றார்.

**கொடிய போரினால் வட-கிழக்கு மக்களின் பொருளாதாரம் சீரழிந்துள்ளமை பற்றிக் கூறினீர்கள். எனவே, அதனை மீண்டும் கட்டியெழுப்ப விசேட கடன்திட்டங்கள் எவற்றையாவது வகுத்துள்ளீர்களா?**

ஆம், அப்படிச் சில கடன் திட்டங்கள் உள்ளன. சிறிய, நடுத்தரக் கடன் திட்டமென ஒரு திட்டமுள்ளது. அந்த வகையில் 'சாகன்யா' என்னும் திட்டம் அதைவிட, சர்வதேச நிதியமைப்புகளின் மூலம் கிடைக்கும் கடன் திட்டம் 'ரிதிபல' என்னும் கடன் திட்டமுள்ளது. கூடுதல் வட்டி அறவிடப்பட மாட்டாது.




**இன்று பொருளாதார ரீதியில், பாதிக்கப்பட்டுள்ள அநேக மக்களின் சொத்துக்கள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குள்ளே முடக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள், தமது அந்தச் சொத்துக்களுக்குரிய ஆவணங்களைக் கையளித்துக் கடன்களைப் பெற முடியுமா என வினவியபோது,**

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள சொத்தை எமக்குப் பாதுகாப்பு ஆவணமாக கையளிப்பார்களாக இருந்தால் அதனை காணிப் பதிவுக் காரியாலயம் உறுதிப்பாட்டோடு காப்புறுதி செய்து தருவார்களாயின் எவ்வித பிரச்சினையும் இல்லை. கடனைப்பெற வாய்ப்புக்கள் உண்டு எனவும் அமித தெரிவித்தார்.

பின் இது தொடர்பாக கருத்து வெளியிட்ட யாழ்.கிளை முகாமையாளர் ரவீந்திரா, உயர் பாதுகாப்பு வலயம் என்னும் போது, நாம் சில விடயங்களை கவனத்தில் கொள்ளவேண்டும். 'உயர் பாதுகாப்பு வலயச் சொத்துக்கள், இராணுவத்தினரால் நீண்டகாலமாகவே முடக்கப்பட்டிருக்கின்றன.

எனவே இது தொடர்பாக - புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சும், சிரான் போன்ற அமைப்புக்களும் இணைந்து உறுதிப்பாட்டைத் தருமிடத்து நாம் இது தொடர்பாக பரிசீலிக்க முடியும் அல்லது சட்டச் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்று, தனது நியாயப்பாட்டைத் தெரிவித்தார்.

**கல்வி சம்பந்தமான கடன் திட்டங்கள் எதுவும் வைத்துள்ளீர்களா எனக் கேட்ட போது,**

இதற்காக 'பஹஸன்' என்னும் ஒரு திட்டமுள்ளது. இது தொடர்பான மேலதிக தகவல்களைக் கொமர்ஷல் வங்கிக் கிளையில் பெற்றுக் கொள்ளமுடியும் எனத் தெரிவித்தார்.

**இறுதியாக யாழ்ப்பாண மக்களுக்கு நீங்கள் கூறவிரும்பும் செய்தி என்ன என்ற போது,**

சமாதானம் வெகுவிரைவில் வரவேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம். அப்போது தான் நாடு சுபீட்சம் பெறும். யாழ்ப்பாண மக்களை எமது வங்கியினூடாக அரவணைத்து அவர்களின் பொருள்தார அபிவிருத்திக்கு உறுதுணையாக இருப்போம். ஆகவே, நாம் அனைவரும் நிரந்தர சமாதானம் பெறப் பிரார்த்திப்போம் என்று கூறி நிறைவு செய்தார்.

நாம் வெளியே வரும்போது, வாடிக்கையாளர்கள் தமது புதிய கணக்குகளை ஆரம்பிப்பதற்காக, வரிசையில் காத்து நின்றமையைக் காணக்கூடியதாக இருந்தது.

*நேர்காணல்:*
எஸ்.ரி.மயில்வாகனம், இ.சர்வேஸ்

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | சாவகச்சேரி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சங்கானை | மருதனார்மடம் | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 20/= | 40/= | 20/= | 35/= | 20/= | 15/= | 20/= |
| வெண்டிக்காய் | 15/= | 30/= | 20/= | 30/= | 15/= | 12/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 65/= | 65/= | 70/= | 60/= | 70/= | 65/= | 80/= |
| கத்தரிக்காய் | 40/= | 35/= | 35/= | 45/= | 50/= | 35/= | 60/= |
| பாகற்காய் | 30/= | 40/= | 30/= | 40/= | 40/= | 30/= | 40/= |
| கரட் | 40/= | 50/= | 40/= | 60/= | 40/= | 30/= | 60/= |
| பீற்றூட் | 15/= | 25/= | 25/= | 25/= | 20/= | 12/= | 30/= |
| முருங்கைக்காய் | 80/= | 120/= | 80/= | 100/= | 50/= | 45/= | 80/= |
| வெங்காயம் | 30/= | 30/= | 28/= | 30/= | 30/= | 35/= | 35/= |
| பச்சைமிளகாய் | 50/= | 50/= | 50/= | 60/= | 40/= | 60/= | 60/= |

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*காற்றுள்ள போதே தூற்றிக்கொள்*

-தமிழ்ப்பழமொழி

## நமது நோக்கு

# நம்பிக்கையற்ற எதிர்பார்ப்புக்கள்

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகி ஓராண்டுக்கும் மேலாகிவிட்டது. ஆனால், விடியல் குறித்து எமது மக்களின் நம்பிக்கைகள் இன்னமும் வெறும் எதிர்பார்ப்புகளாகவே தொடர்கின்றன.

யாழ் - கண்டி வீதி திறப்புடன், பெரும் பரபரப்பாகவே தொடங்கிய சமாதான நகர்வுகள் - அந்த வீதிவழியாக அன்றாடம் வேகமாகப் பயணிக்கும் வாகன இரைச்சலுக்குள் முற்றாக அடங்கிப்போய்விட்டன.

பாதை திறப்பே சமாதானத்தின் இறுதி இலக்கு என அரசாங்கம் தீர்மானித்துவிட்டதோ...என்னவோ...!

பேச்சுவார்த்தை மேசைகளில் ஆராயப்பட்ட விடயங்கள், தீர்மானிக்கப்பட்ட விடயங்கள், புரிந்துணர்வு உடன்பாட்டின்மூலம் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் அனைத்தும் அறிக்கைகளாகவும், ஆவணங்களாகவும் மட்டுமேயுள்ளன.

அரசும் - சர்வதேச சமூகமும் சமாதானத்தை வலியுறுத்தியே வருகின்றன. ஆனாலும், சமாதான முன்னெடுப்புகள் நகர்வு நிலையில் இருந்து - தேக்க நிலைக்கு மாறிவிட்ட நிகழ்வே யதார்த்தமாகியுள்ளது.

ஜனாதிபதியை மீறிச் செயற்பட அதிகாரமற்ற பிரதமர், பிரதமர் தன்னை மீறிச் செயற்பட்டு விடக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கும் ஜனாதிபதி - இருவரும் இணைந்து சமாதானம் என்ற பெயரில் எதையாவது செய்துவிடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் எதிர்க்கட்சிகள், பௌத்த மதகுருமார் மற்றும் பேரினவாதச் சிந்தனையாளர்கள் எனச் சமாதானப் புறாவை சுற்றி வியூகமிட்டிருக்கும் அமைதி விரோத சக்திகள் பலவாகும்.

ஆனாலும், சமாதானம் என்ற சொல் உரத்தே ஒலிக்கப்படுகிறது. எனினும் அதில் சுரத்தில்லை.

அடுத்து நடக்கக்கூடிய பேச்சுக்கள் சிக்கலாகவே இருக்கும். மேலும் சில தடவைகள் அது இடைநடுவில் முறிந்தாலும் ஆச்சரியமில்லை என்று அண்மையில் ரணில் கூறியவற்றை நினைவில் கொள்வது இந்த நிலைக்கு அவசியமானதொன்றாகும்.

சிறிலங்காவின் இனப்பிரச்சினை சகல வழிகளிலும் கடினமான, சுலபமாகத் தீர்வுகாணமுடியாத விவகாரம் என்பது அரசுக்கு மட்டுமல்ல, சர்வதேச சமூகத்துக்கும் நன்கு தெரியும்.

சிறிலங்காவின் இனப்பிரச்சினையை பெரும் விகாரமாகவும், விவகாரமாகவும் மாற்றிய தமிழ்மக்கள் மீதான யுத்தத்திற்கு - அரச படைகளுக்கு ஆலோசனையும், பயிற்சியும், ஆயுதங்களும் வழங்கிய பலரில் - இன்று சமாதானத்தை வலியுறுத்தி அதற்கான முயற்சிக்கும் சில நாடுகளும் அடங்கும்.

முன்பு இவர்களுக்கெல்லாம் யுத்தம் அவசியமாகப்பட்டது. இப்போது சமாதானம் அவசியமாகத் தேவைப்படுகிறது.

போர் என்றால் போர் என்ற ஜே.ஆரின் போர்ப்பிரகடன வாசகம் ஒலிக்கப்பட்ட வேளையிலும், சமாதானத்திற்கான யுத்தம் சந்திரிகாவின் தத்துவம் பேசப்பட்ட காலத்திலும் - சர்வதேச சமாதானம் பாடிகள் மௌனவிரதம் காத்துவந்ததை நாம் அறிவோம்.

போரில் ஏற்பட்ட திருப்பங்களின் தாக்கங்களே, சமாதானத்தை நோக்கி இவர்களைத் தலைதிரும்பிப் பார்க்க வைத்தது என்பதில் சந்தேகமில்லை. எப்படியோ ஒரு சமாதான சூழல் ஏற்பட்டுவிட்டது.

ஆனால், சமாதானத் தீர்வு இன்னமும் வெகு தொலைவிலேயே உள்ளது. அப்படி இருந்தாலும் அந்தத் தீர்வை இந்த அரசால் சாதிக்க முடியுமா என்பது சந்தேகமாகவேயுள்ளது.

அன்றாடம் வெளிவரும் அரசதரப்பு செய்திகளில் பிரதமரும், அமைச்சர்களும் ஆளுக்காள் சமாதானம் குறித்து வேறுவேறு தொனியில் கருத்துக்களைக் கூறுவதில் இருந்தே நிலைமைகளை உணர்ந்துகொள்ளமுடியும்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகி ஒருவருடம் பூர்த்தியானபோதும், எமது மக்களுக்கு எந்தவிதமான நன்மைகளும் கிடைக்கவில்லை என்பதே பொதுவான நிலைப்பாடாகவுள்ளது என்று, தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியிருப்பதை வைத்துப் பார்த்ததில் - இன்றைய சமாதானச் சூழலின் யதார்த்தம் நன்கு தெரிவாகும்.

ரணில் சமாதானப் பேச்சுக்களின் எதிர்காலம் கடினமானவை.., இடையில் சில சமயங்களில் உடையக்கூடும் என எதிர்வுகூறுகையில், அவரது ஆலோசகரான பிரட்மன் வீரக்கோன் அரசின் சமாதான முயற்சிகள் எந்தக் கட்டத்திலும் முறியாது என்று உறுதிபடக் கூறியுள்ளார்.

இதில் யாருடைய கருத்து சரியானது என்று வாதிடுதல் அர்த்தமற்றது, ஆனால் ஒன்றுமட்டும் கூறமுடியும்.

சாத்தியமான வழிகளை அறிந்து, நியாயமான முறைகளில் பிரச்சினைகளை அணுகி, உறுதியான முறையில் நடவடிக்கைகளை மேற்கொண்டால் மட்டுமே - சமாதான நகர்வுகள் அடுத்த கட்டத்தை நோக்கி அடியெடுத்து வைக்கமுடியும்.

இல்லையேல் சமாதானம் என்பது வெறுமனே காற்றோடு கரைந்தழியும் ஒரு சொல்லாக மட்டுமே இருக்கும்.

இதனை அரசு புரிந்துகொள்ளவேண்டிய காலகட்டம் இதுவேயாகும்.

## நாடும் நடப்பும்




# முஸ்லிம் மக்களுக்கான உரிமைகளை வழங்காது நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தமுடியாது!

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(அம்பாறை)

முஸ்லிம் மக்களின் உரிமைகளை வழங்காது, வடக்கு-கிழக்கில் நிரந்தர சமாதானத்தை கொண்டுவரமுடியாது என, அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கல்முனை இஸ்லாமாபாத் நகரில் நடைபெற்ற எம்.எச்.எம். அஷ்ரப்பின் நினைவுதின கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அடுத்துவரும் மாதங்களுக்குள் சில முக்கியமான முடிவுகளை முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கவுள்ளது. இது நாட்டினுடைய தேசிய அரசியலில்கூட பல மாற்றங்களை கொண்டுவரும். இது தேசிய அரசுக்குக்கூட பாதிப்பாக அமையலாம். எனவே, அரசு - முஸ்லிம்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக முக்கிய கவனம் எடுக்கவேண்டும்.

இன்று புலிகளும், அரசும் வடக்கு - கிழக்கில் சமாதானத்தை கொண்டுவர முயல்கிறார்கள். அதற்காகப் பல நாடுகளுக்கும் செல்கிறார்கள். ஆனால், முஸ்லிம் மக்களின் அரசியல் சுதந்திரத்தை மதிக்காவிட்டால் - நிரந்தர சமாதானம் ஏற்படாது எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

# நாகர்கோவில் பிரதேச கடற்பரப்பில் சிங்கள மீனவர்களின் அத்துமீறல்!

## அதிகரிப்பதாக அந்தப்பகுதி மீனவர்கள் தெரிவிப்பு

நாகர்கோவில் மணல்காடு கடற்பிரதேசத்தில் சிங்கள மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்திருப்பதாக, அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

வடமராட்சி கிழக்கு கடற்பிரதேசமான நாகர்கோவில், மணற்காடு, குடத்தனைப் பகுதிகளில் சிங்கள மீனவர்கள் ரோலர் மீன்பிடிப் படகுகளில் வந்து தமது பகுதிக்குள் மீன்பிடிப்பதாக அந்தப்பகுதி மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

இதனால் தங்களால் நிம்மதியாக தொழில்செய்ய முடியாமல் உள்ளதாகவும், தற்போது இந்திய மீனவர்களின் வருகை குறைந்துள்ளபோதும் சிங்கள மீனவர்களின் அத்துமீறல் அதிகரித்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அத்துமீறலைத் தடுப்பதற்கு எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. ஆனால், நாம் மீன்பிடிப்பதற்கு பல கட்டுப்பாடுகளை படையினர் விதித்து வருகின்றனர் என்றும் மீனவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# ஆறு இந்திய மீனவர்கள் கடற்படையால் கைது!

காங்கேசன்துறை துறைமுகப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் - இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த ஆறு இந்திய மீனவர்களைக் கைதுசெய்தனர்.

கடந்த திங்கட்கிழமை மாலை 7 மணியளவில் இந்திய மீன்பிடிப்படகு ஒன்றை சோதனையிட்டபோதே - அந்த ஆறு இந்திய மீனவர்களும் கைதுசெய்யப்பட்டதாக, கடற்படையினர் தெரிவித்தனர்.கைதான மீனவர்களையும் அவர்களின் கடற்தொழில் உபகரணங்களையும் கடற்படையினர் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

# கட்டுக்கரைக்குள வாய்க்கால்களை திருத்துவது குறித்து ஆலோசனை!

மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரைக்குளத்தின் வாய்க்கால்களைத் திருத்துவது சம்பந்தமான கூட்டமொன்று - நேற்றுமுன்தினம் மன்னார் அரச செயலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் - மன்னார் மாவட்ட அரச அதிபர், நியாப் திட்டத்தின் வடக்கு - கிழக்கிற்கான உதவி அத்தியட்சகர் எஸ்.மனோகரன் மற்றும் கொழும்பு வன அபிவிருத்தி ஆலோசனைசபைப் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தக் குளத்தின் வாய்க்கால்களை - ஒழுங்கான முறையில் திருத்திப் பராமரித்துவந்தால், மன்னார் மாவட்டத்தில் 30000 ஏக்கர் வயல்களில் கூடுதலாக நெற்செய்கை மேற்கொளளலாம் என்று அங்கு தெரிவிக்கப்பட்டது. அத்துடன், கட்டுக்கரைக் குளத்தை ஆழமாக்கினால் - மன்னாரின் வங்காலை, அடம்பன் போன்ற பிரதேசங்களில் ஏற்படும் நீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்யலாம் என, அங்கு உரையாற்றிய மன்னார் அரச அதிபர் தெரிவித்தார். (201)

# மூவரைக் கடித்த விசர்நாய் மக்களால் கொல்லப்பட்டது

இரு மணித்தியாலத்துக்குள் விசர் நாய் ஒன்று, பாடசாலை சிறுமி ஒருவர் உட்பட மூவரைக் கடித்த சம்பவம் ஒன்று கரணவாயில் நாவலர் மடத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இந்த நாய் வீதியில் சென்று கொண்டிருந்தவர்களையும் விரட்டிக் கடிக்க முற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனை அடுத்து அந்த ஊர் மக்களால் விசர்நாய் அடித்துக் கொல்லப்பட்டது. இந்தச் சம்பவத்தை கேள்வியுற்ற கரவெட்டி அரச வைத்திய அதிகாரி - சம்பவ இடத்திற்கு விரைந்துவந்து, நாயைப் புதைப்பதற்கான ஒழுங்குகளை பாதுகாப்பான முறையில் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (116)

# கல்விசாரா ஊழியர்களுக்கு சுய விருப்பில் இடமாற்றம்!

(கொழும்பு)

மத்திய அரசாங்கத்தில் கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய பாடசாலைகள், தேசிய கல்வியியற் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் பணியாற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு - அடுத்த ஆண்டு முதல் சுயவிருப்பின் அடிப்படையில் இடமாற்றம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைத் தொழிலாளர்கள், ஆய்வுகூட உதவியாளர்கள், சுகாதாரத் திணைக்களத் தொழிலாளர்கள், நூலக உதவியாளர்கள், விடுதி மேற்பார்வையாளர்கள் மற்றும் சமையல் தொழிலாளர்களே அடுத்த ஆண்டுமுதல் சுயவிருப்பின் அடிப்படையில் இடமாற்றங்களைப் பெறமுடியுமென, கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஏ.பி.குணசேகர அறிவித்தார்.

குறித்த ஒரு நிறுவனத்தில் ஆகக்குறைந்தது ஐந்து வருடங்கள் சேவையாற்றிய கல்விசாரா ஊழியர்கள் - இந்தமாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

# போராட்ட வரலாற்றில் திருப்பமான தியாக தீபம் திலீபனின் தற்கொடை



திலீபனின் தியாகமோ வித்தியாசமானது, வியக்கத்தக்கது. எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டத்தில் தன்னைப் பலிகொடுத்த, ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தைத் திலீபன் புரிந்தான்.

அவனது மரணம் ஒரு வரலாற்று நிகழ்ச்சி. தமிழீழப் போராட்ட வரலாற்றில், ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி. தமிழீழத் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பிய நிகழ்ச்சி. பாரத நாட்டைத் தலைகுனிய வைத்த நிகழ்ச்சி. உலகத்தின் மனச்சாட்சியைச் சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்காக இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தமென்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக, மக்கள் அனைவரையும் எழுச்சி கொள்ளச் செய்த புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது.

திலீபன் தமிழ் மக்களுக்காக இறந்தான், அவர்களின் உரிமைக்காக இறந்தான், தமிழ் மண்ணுக்ான இறந்தான், தமிழரின் பாதுகாப்பிற்காக, சுதந்திரத்திற்காக, கௌரவத்திற்காக இறந்தான். தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக - ஒருவன் எத்தகைய உயர்ந்த உள்ளத் தியாகத்தைச் செய்யமுடியுமோ, அற்புதமான அந்த அர்ப்பணிப்பைத் தான் அவன் செய்திருந்தான்.

தமிழீழ அகதிகள் -தமது சொந்தக் கிராமங்களுக்குச் செல்லமுடியாது, அகதி முகாமுக்குள் முடங்கிக் கிடக்க, சிங்களக் குடியேற்றம் துரிதகதியில் மண்ணைக் கபளீகரம் செய்தது. சிங்கள அரசின் பொலிஸ் நிர்வாகம் -தமிழ்ப் பகுதிகளில் விஸ்தரிக்கப்பட்டது.

அவசர அவசரமாகச் சிங்கள இனவாத அரச இயந்திரம்- தமிழ்ப் பகுதிகளில் ஊடுருவியது. சமாதான ஒப்பந்தம் என்ற போர்வையில், இந்தியப் படையின் அனுசரணையுடன், சிங்கள அரசின் ஆதிக்கம் தமிழீழத்தில் நிலைகொள்ள முயன்றது.

இந்தப் பேராபத்தை உணர்ந்து கொண்ட திலீபன் - இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கத் திடசங்கற்பம் கொண்டான். சிங்கள அரசுடன் உரிமைகோரிப் போராடுவதில் அர்த்தமில்லை. பாரதம்தான் எமது இனப் பிரச்சினையில் தலையிட்டது, எமது உரிமைக்கு உத்தரவாதமளித்தது, எம்மிடம் ஆயுதங்களை வாங்கியது, எமது ஆயுதப்போராட்டதை நிறுத்தி வைத்தது. ஆகவே பாரத அரசிடம் தான் நாம் உரிமை கோரிப் போராட வேண்டும்.

எனவேதான், பாரதத்துடன் தர்மயுத்தம் ஒன்றைத் தொடுத்தான் திலீபன். அத்தோடு, பாரதத்தின் ஆன்மீக மரபில் பெறப்பட்ட அகிம்சை வடிவத்தை ஆயுதமாக எடுத்துக் கொண்டான். மக்களின் ஒன்று திரண்ட சக்திமூலமே, மக்களின் ஒருமுகப்பட்ட எழுச்சிமூலமே நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். திலீபனின் ஈடு இணையற்ற தியாகத்திற்கு, நாம் செய்யும் பங்களிப்பு இதுதான் எனத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் - திலீபன் மரணம் குறித்து வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார்.

இது நாங்கள் மீட்டுப் பார்க்க வேண்டிய வரலாற்றுப் பதிவாகும்.

லெப்.கேணல். தியாகி திலீபனின் வரலாற்றுச் சாதனையை, தேசியத் தலைவர் பிரபாகரன் வெளியிட்ட அறிக்கையிலிருந்து நாம் இலகுவில் இனம்கண்டுகொள்ள முடியும்.

திலீபனின் அரசியற் செயற்பாடுகள் - விடுதலைப் போருக்கு வலுச் சேர்த்தது. காலவெள்ளத்தில் எத்தனையோ இயக்கங்கள் அள்ளுண்டு போயின. ஆனால், விடுதலைப் புலிகளை யாராலும் அசைக்கமுடியாது. தமிழ் மக்களின் ஒரே விடுதலை இயக்கம் - புலிகள்தான் என்பதை நிலைநிறுத்தினான். அவனது அரசியல் ஆற்றல் அனைவரையும் கவர்ந்து இழுத்தது.

இலங்கை இராணுவத்துடனான நேரடி மோதல்களிலும், களமுனைச் சமர்களிலும் -திலீபனின் போராற்றல் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

அவன் ஒரு சிறந்த பேரறிவுமிக்க போராளியாகவே மிளிர்ந்தான் என்பது வரலாற்றில் பொறிக்கப்பட்டுள்ளது.

மக்களுடன் நெருக்கமாகப் பழகும் சுபாவம் அவனிடம் இயல்பாகவேயிருந்தது.

அது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற்கோட்பாடுகளை, நேர்த்தியாக வழிநடத்தச் செல்லப் பேருதவியாக இருந்தது எனலாம்.

பிரச்சினைகளை இனங்காணவும், அதற்குத் தீர்வுகாணவும் பொருத்தமான அமைப்புக்கள் - புதிதாகத் தோற்றம் பெறுவது அவசியம் என எண்ணி, பல அமைப்புக்களை உருவாக்கினான். அதுவே இன்று வளர்ந்து, எமது மண்ணையும், மக்களையும் வாழவைக்கிறது என்று சொன்னால், அது மிகையாகாது.

கிராம நீதிமன்றுகள், கிராம விழிப்புக்குழுக்கள், உற்பத்திக் குழுக்கள், தமிழீழ ஒலி, ஒளி சேவை, கலாசார சேவை, சுதந்திரப் பறவைகள் போன்ற பொது அமைப்புக்கள் அமைத்து, பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முனைந்தான். திலீபனால் அமைக்கப்பட்ட விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, மகளிர் அமைப்புப் போன்றவை -

அரசியல் முறைமைகளை உறுதியாகக் கொண்டுசெல்லும் சக்திகளாக உயர்ந்து நிறகின்றன. தமிழ் மக்களின் போரிடும் ஆற்றல், போராட்ட உணர்வுகள் அப்போது உயர் நிலையில் இருப்பதற்கு உதவீ புரிந்தன எனலாம். தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் திலீபனின் அரசியல் வாழ்வு காத்திரமானதும், நிறைவானதும் ஆகும்.

தாயக விடுதலையை நெஞ்சினில் சுமந்த் விடுதலைப் புலிகள் - இந்தியாவின் தலையீட்டிற்குப் பின் போராட்ட வடிவத்தை மாற்றினர்.

இந்தியா பலம்பொருந்திய நாடு- தமிழ் மக்களின் பாதுகாப்புக்கும், வாழ்வியல் ஆதாரங்களை மேம்படுத்தவும் நமக்கு உற்ற துணையாக இருக்குமென நம்பியவர்களுக்கு, பெருத்த ஏமாற்றத்தை இந்திய நடுவன் அரசியல் செயல் அமைந்தன.

இராணுவ ஆக்கிரமிப்புக்குட்பட்டிருந்த தமிழர் தாயகம் - தன் வாழ்வியல் ஆதாரங்கள் அனைத்தையும் இழந்திருந்தன. அப்போது இந்திய இராணுவத்தின் வரவால், இனப்பிணக்கு மேலும் சிக்கலானது.

இந்திய இராணுவத்தின் (அமைதிப்படை) வருகை, துரோகம் நிறைந்தது, உள்நோக்கமுடையது.

இவர்களால் தமிழ் இனம் எவ்வித நன்மையும் அடையமுடியாது என்பதை, தமிழர்கள் அறிந்து கொள்ள அதிக நாட்கள் தேவைப்படவில்லை.

இலங்கை - இந்திய வல்லாதிக்க சக்திகள் கூட்டாக இணைந்து, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்க முனைவதை, இனியும் விடுதலைப் புலிகளால் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதை நினைவூட்டும் வகையில், அகிம்சை ஆயுதத்தை திலீபன் ஏந்தினான்.

ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து, 1987 செப்ரெம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் - 1987 செப்ரெம்பர் 26 ஆம் திகதிவரை தியாகி திலீபன் உண்ணாநோன்பிருந்து, உயிர்நீத்தான்.

அன்றைய சூழலில் இவ்வாறு உண்ணாவிரதமிருப்பதற்கு, விடுதலைப் புலி உறுப்பினர்கள் பலர் முன்வந்தனர். ஆனால், தேசியத் தலைவர் வே.பிரபாகரன் - இந்தப் பாக்கியத்தை லெப்.கேணல் தியாகி திலீபன் ஒருவருக்கே தந்தார்.

ஏனெனில், சாகும்வரை நீராகாரமின்றி உண்ணாநோன்பு இருக்க வேண்டுமென்பதில், தளராத உறுதி மிக்கவனாக திலீபன் இருந்தான். இந்திய வல்லாதிக்கத்தின் முகத்திரையைக் கிழிப்பதில் பெரும் அவாக் கொண்டிருந்தான் என்றுதான் சொல்லவேண்டும்.

இந்தியாவை எதிர்க்கத் திலீபன் தூக்கிய அகிம்சை ஆயுதம் - இந்திய வரலாறறைத் திருத்தியமைக்க வேண்டிய தேவை உலகிற்கு ஏற்பட்டது என்பது சாதாரண விடயமல்ல. இந்திய - இலங்கை அரசுகள் முன், திலீபன் -ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தான்

☆ பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ், தடுப்புக்காவலில் அல்லது சிறைகளில் அடைத்து வைக்கப்பட்ட தமிழர்கள் -விடுதலை செய்யப்படவேண்டும்.

☆ புனர்வாழ்வு என்ற பெயரில், தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்கள் உடன் நிறுத்தப்படவேண்டும்.

☆ இடைக்கால அரசு நிறுவப்படும் வரை, புனர்வாழ்வு என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் சகல வேலைகளும் நிறுத்தப்பட வேண்டும்.

☆ வடக்கு - கிழக்கில் பொலிஸ் நிலையங்கள் திறக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

☆ இந்திய அமைதிப்படையின் மேற்பார்வையில், ஊர்காவற் படைக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களை மீளப்பெற வேண்டும். தமிழ்க் கிராமங்கள், பாடசாலைகளிலுள்ள இராணுவ முகாம் மற்றும் பொலிஸ் முகாம்கள் மூடப்படவேண்டும்.

போர்க்களத்தில் வீரச்சாவைத் தழுவும் வேங்கைகளுக்கு - உண்ணா நோன்பு என்பது சற்றுப் புதுமையான விடயம்தான்.

இந்திய அரசுக்குத் திகைப்பாக இருந்தது. ஐந்து அம்சக் கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவேண்டும் என, இந்திய நடுவன் அரசுக்குக் காலக்கெடு விதித்து, விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தினால் கடிதம் எழுதப்பட்டது. 24 மணித்தியாலத்தில் பதில்தரப்படவேண்டி, இந்திய உயர்ஸ்தானிகரிடம் 13.09. 1987 இல் கடிதம் கையளிக்கப்பட்டது.

திலீபன் உண்ணாநோன்பு தொடங்க இருக்கும் கடைசி நிமிடம் வரை, இந்தியாவிடமிருந்து சாதகமான பதில் ஏதும் வரவில்லை.

'தீராத நோயெல்லாம் தீர்க்கவல்லவன்' எனப் பக்தர்கள் எல்லாம் போற்றும் நல்லூர் முருகன் ஆலய முன்றலில் அமைக்கப்பட்ட விசேட பந்தலுக்குப் போராளிகள் புடைசூழ, மக்கள் வெள்ளம் திரண்டுவர அழைத்து வரப்படுகின்றான் திலீபன்.

வீரத் தாயொருத்தி - வீரமகன் திலீபனுக்கு நெற்றியில் திலகமிட்டு, உச்சிமோந்து கொள்கிறாள்.

1987 செப்ரெம்பர் 15 ஆம் திகதி, காலை 9.58 மணிக்கு, சாகும்வரை உண்ணாநோன்பை திலீபன் தொடங்குகிறான். அப்போது யாரும் எண்ணவில்லை, திலீபன் வாழ்வு இத்தோடு முடிந்து விடுமென்று, அங்கு கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்கள் மட்டுமல்ல, உலகமே நினைத்திருந்திருக்காது.

நலலை வீதியில் தன்னை உருககித் தவமிருந்தான் தியாகி திலீபன். இந்திய அமைதிப்படை மட்டுமல்ல, இந்திய அரசும் இதுபற்றி ஆக்கபூர்வமாகச் சிந்தித்துச் செயல்படாமல், மௌனமாக இருந்தது.

ஆனால், மக்கள் அமைதியாக இருக்கவில்லை. நல்லை வீதியைச் சுற்றி மக்கள் வெள்ளம் அணிதிரண்



டது. திலீபனின் உண்ணாநோன்புக்கு அதரவாக தாங்களும் அடையாள உண்ணாநோன்பை மேற்கொண்டனர்.

நாளாந்தம் தாயகத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்து குவியும் மக்கள் - இரவு பகலாக திலீபனுக்குப் பக்கத்தில் இருந்தனர்.

ஆறாம் நாள் - இந்திய அமைதிப்படையின் குரல் தரவல்ல மூத்த தளபதி ஒருவரும், பிரிகேடியர் ராகவன், எயார் கொமாண்டர் ஜெயக்குமார், கடற்படைத் தளபதி அபயசிங்க ஆகியோர் - விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியபோதும், எந்தத் தீர்வும் காணப்படவில்லை.

நாட்கள் நகர்ந்தன. திலீபன் உருகி.... உருகி ஒளிர்ந்து கொண்டிருந்தான். நீராகாரமின்றி சாகும்வரை உண்ணாநோன்பு - இது ஒரு கடினமான பணி. உலகில் எங்குமே நிகழ்ந்திராத அற்புதச்செயல்.

உலகின் பல பாகங்களில் உண்ணா நோன்புப் போராட்டங்கள் நடந்துள்ளன.

ஆனால், அங்கெல்லாம் நீர் அருந்தி உண்ணாவிரதப் போராட்டங்கள் சில நடைபெற்றிருக்கின்றன. ஆனால், நீர் அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தி, உயிர்க்கொடை செய்தது உலகில் திலீபன் மட்டும்தான்.

மக்களுக்காக திலீபன் மெல்ல... மெல்ல கரைந்துகொண்டிருக்க, இந்தியா மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையும் கரைந்து கொண்டிருந்தன.

சாவை நெருங்கிவிட்டநிலையிலும் - தனது பேச்சாற்றல், நினைவாற்றலை இழந்து வரும் நிலையிலும், வைத்தியர்களின் ஆலோசனைகளை மீறி, மக்களுக்கு உரையாற்றினான்.

இலட்சக்கணக்கான மக்கள் அணிதிரண்டு நின்றதைப் பார்த்த திலீபன்- "நீங்கள் புரட்சிக்குத் தயார் என்ப



தைப் பார்த்துத் திருப்தியடைகிறேன். இன்று என்னால் பேசமுடியவில்லை.

ஆனால், நீங்கள் தந்த உற்சாகத்தால் பேசுகிறேன். உங்கள் உற்சாகம் என்னை வாழவைத்துள்ளது. நீங்கள் பெரும் புரட்சிக்குத் தயாராகவேண்டும்.

இதுவே என் ஆசை. நான் மீட்கப்படமுடியாத இடத்துக்குச் சென்றுவிட்டதை உணர்கிறேன். ஆனால், பெரும் பணியை உங்களிடம் விட்டுச் செல்கிறேன். நான் மிகவும் நேசிக்கின்ற போராளிகள், என் சகோதரிகள், எல்லாவற்றிற்கும் மேலான என் தலைவன் உங்களிடம் இருக்கிறார்கள்.

நீங்கள் பரிபூரணமாக கிளர்ந்தெழவேண்டும். மாபெரும் மக்கள் புரட்சிவெடிக்கட்டும். சுதந்திர தமிழீழம் மலரட்டும். இந்தப் புரட்சிநாள் என்னுயிர்க்கும் மேலாக நேசிக்கும் மக்களுக்குக் கிடைக்கட்டும்".

எதிர்பார்த்த நாட்கள் எல்லாம் இரையாகிப்போன வரலாற்றை மீண்டுமொருதடவை தமிழர்கள் அனுபவித்தார்கள் என்று சொல்லவேண்டும்.

இலங்கையின் இனப்பிரச்சினை, இந்தியா கையாள முற்பட்டதன் விளைவை எதிர்கொள்ள திலீபன் தயாராகிவிட்டான்.

பன்னிரண்டாம் நாள் காலை திலீபனின் உடல்நிலை மோசடைந்துள்ள செய்தி - தமிழர் தாயகப் பகுதி எங்கும் பரவியது.

யாழ். குடா எங்கும் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்தது - திலீபனைக் கடைசியொரு தடவை பார்த்து விடலாமென்ற ஆவலுடன்.

திலீபன் உயிர்பிரிந்த செய்தி காலை (10.58) தமிழ் மக்களின் காதுகளுக்கு எட்டியபோது, எழுந்த குமுறல் அடங்கப் பல நாட்களாயிற்று.

தியாகி திலீபனின் வித்துடல்- யாழ்.குடா எங்கும் மக்கள் அஞ்சலிக்காகச் சென்றபோது, மக்கள் வெள்ளம் அவனுக்குக் கொடுத்த மரியாதை - காலத்தால் மறக்கமுடியாதவையாகும்.

திலீபனின் விருப்பப்படி அவனது உடல் - யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு, பட்டப்படிப்பு மாணவர்களின் மேல் படிப்பிற்காக வழங்கப்பட்டது என்பதை இங்கு நினைவுகூர வேண்டும்.

1987 ஆம் ஆண்டு, தமிழீழ வரலாற்றில் மிக முக்கியமான ஆண்டாகும். செப்ரெம்பர் 15 ஆம் திகதி தொடக்கம், 26 ஆம் திகதி வரை லெப்.கேணல் தியாகி திலீபன் நிகழ்த்திய உடற்போர் -நாகரீகமுள்ள உலக சமூகத்தை நிச்சயம் உலுப்பி விட்டிருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை.

**- கலி**

### பயங்கரவாதத்துக்கு உதவி! பேரழிவு ஆயுத உற்பத்தி!!

# உலக நாடுகளின் பாதுகாப்புக்கு சிரியாவின் செயல் அச்சுறுத்தல்!

## ஆயுதக்கட்டுப்பாட்டு அமெரிக்க உதவி அமைச்சர் குற்றச்சாட்டு



உலகநாடுகளின் பாதுகாப்புக்கு சிரியா அச்சுறுத்தலாக உள்ளதென, சர்வதேச நாடுகளின் ஆயுதக் கட்டுப்பாட்டுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சர் ஜோன் பொல்லன் தெரிவித்தார்.

சர்வதேச பயங்கரவாதத்திற்கு உதவி புரிவது மட்டுமல்லாது, பேரழிவைத் தரக் கூடிய ஆயுதங்களையும் சிரியா தன்வசம் வைத்திருப்பதாகவும் கூறியுள்ள பொல்லன்,

ஹிஸ்புல்லா போராளிகளைக் கட்டுப் படுத்த சிரியா தவறியுள்ளதாகவும் ஈராக்கிற்குள் அவர்கள் செல்ல அனுமதிப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இவ்வாறான நடவடிக்கைகளை சிரியா நிறுத்தாவிட்டால், அந்த நாட்டுக்கெதிராக பொருளாதாரத் தடைகளைக் கொண்டுவர அமெரிக்க ஆலோசித்து வருகிறது எனவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை - அமெரிக்க உதவி அமைச்சரின் குற்றச்சாட்டை சிரியாவின் வெளிவிவகார அமைச்சர் பருக் - அல் - சாறா மறுத்துள்ளார்.

# உல்லாசப் பயணிகளை கடத்தவில்லை; கொலம்பியப் புரட்சிகரப் படை அறிவிப்பு!

அண்மையில், கொலம்பியாவின் மலைப்பிரதேசமொன்றில் வைத்து கொலம்பிய புரட்சிகரப் படையால் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டிருந்ததாகக் கருதப்பட்ட 8 உல்லாசப் பயணிகளும் தம்மிடம் இல்லையென அந்த அமைப்பு அறிவித்துள்ளது.

இதனால், உல்லாசப் பயணிகளைக் கடத்தியவர்கள், போதைவஸ்துகளைக் கடத்தும் பரா மிலிடரி என்ற அமைப்பாக இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது.



## உலக நோக்கு

உல்லாசப் பயணிகளைத் தேடும முயற்சியில் 1000 இற்கு மேற்பட்ட கொலம்பியப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே - ஐ.நா.பாதுகாப்புச் சபைக்கும், கொலம்பிய புரட்சிகரப் படைக்கும் இடையே பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து கொலம்பியா, பிரேஸில் ஆகிய நாடுகளின் ஜனாதிபதிகள் கடந்த செவ்வாயன்று சந்தித்து ஆராய்ந்துள்ளனர்.

### வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்திய

## அமெரிக்காவின் நடவடிக்கைக்கு அரேபிய இராஜதந்திரிகள் விசனம்!



பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தை பதவிய கற்றி நாடு கடத்துவது குறித்த இஸ்ரேலின் யோசனையைக் கண்டித்து, அரபு நாடுகளால ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்ட சட்ட மூலத்திற்கெதிராக, அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தியமையை அரபுநாடுகளின் இராஜதந்திரிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகள் இந்தச் சட்டமூலத்திற்கு எதிராக வாக்களித்தன. பிரிட்டன், ஜேர்மனி, பல்கெரியா ஆகிய நாடுகள் வாக்கெடுப்பில் பங்குபற்றவில்லை.

இதுகுறித்து யசீர் அரபாத் கருத்துத் தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தன்னை எந்தவிதத்திலும் பாதிக்காது என்றார்.

வீட்டோ அதிகாரத்தை அமெரிக்கா பயன்படுத்திய செயல், மத்திய கிழக்குப் பிரச்சினையை மேலும் சிக்கலுக்குள்ளாக்கிவிட்டதாக, ஐக்கிய நாடுகள் சபைக்கான சிரியத் தூதுவர் தெரிவித்தார்.

### இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில்

## ஜெய்ஷ்-இ-மொஹமட் இயக்க முக்கியஸ்தர் ஒருவர் உயிரிழப்பு!



இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தில் ஜெய்ஷ் - இ - மொஹமட் இயக்கத்தின் முக்கியஸ்தர்களில ஒருவரான நஸீர் மெமூட் அவான் என்பவர் கொல்லப்பட்டுள்ளதாக, இந்தியப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இந்த இயக்கத்தின் தலைவர் காசிபாபா மூன்று வாரங்களுக்கு முன்கொல்லப்பட்டிருந்தார். அவரின் மரணத்தின் பின்னர் ஏற்பட்ட வன்முறைகளில் 200 இற்கு மேற்பட்டோா உயிரிழந்திருந்தனர்.

கொல்லப்பட்ட நஸீர் மெமூட்- பொலிஸார், படையினர் பலர் உயிரிழக்கக் காரணமாக இருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காஷ்மீரில், பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதையடுத்து கடந்த இரண்டு வாரங்களில், 90 இற்கு மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.


## கேள்வி அறிவித்தல்

### கல்வியங்காடு பொதுச் சந்தை புனரமைப்பு

2003.09.04 ம் திகதி கேள்வி அறிவித்தலுக்கு மேலதிகமாக, கேள்வி கோரல பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.
கேள்வி விண்ணப்பம் பெறும் கடைசித் திகதி 2003.09.25 ம் திகதி பி.ப. 3.00 மணி
கேள்வி கிடைக்கக்கூடிய கடைசித் திகதி 2003.09.26 பி.ப. 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் நேரம் 2003.09.26 பி.ப. 3.00 மணி

செ.பத்மநாதன்,
தலைவர்,
மாவட்ட கேள்விச்சபை,
யாழ்ப்பாணம்.

(சி-1555)

## கேள்வி அறிவித்தல்

### குருநகர் மாடிவீட்டு கட்டட திருத்தவேலைகள்

2003.09.04 ம் திகதி கேள்வி அறிவித்தலுக்கு மேலதிகமாக, கேள்வி கோரல் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது. கேள்வி விண்ணப்பம் பெறும் கடைசித் திகதி 24.09.2003 பி.ப. 3.00 மணி
கேள்வி கிடைக்கவேண்டிய கடைசித் திகதி 25.09.2003 பி.ப. 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் நேரம் - 2003.09.25 பி.ப. 3.00

செ.பந்தமநாதன்,
தலைவர்,
மாவட்ட கேள்விச் சபை,
யாழ்ப்பாணம்.

(சி-1556)

## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கம்

### எமது பாராட்டு

இலங்கை அரசு 2003.09.18ல் நடாத்தும்
சாகித்திய மண்டல விழாவில்

'ரத்னஸ்ரீ' பட்டம் சூட்டிக்கௌரவிக்கப்படும் வித்துவான், குகஸ்ரீ, மூதறிஞர் - கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்களையும்,

2002ம் ஆண்டுக்குரிய இலக்கியத் தெரிவில் 'கானலில் மான்' நாவலுக்கு சாகித்திய மண்டலப் பரிசினைப் பெறும் எமது கலாசாரக் கூட்டுறவு பெருமன்ற உறுப்பினரும் மூத்த எழுத்தாளரும் மக்கள் படைப்பாளியுமான தெணியான் அவர்களையும் பாராட்டி மகிழ்வதில் பெருமைப்படுகின்றோம்.

கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம்.
கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

(சி-1552)





இராவணேசனைப் பார்த்தேன். ஆள் வண்டியும் தொந்தியுமாக இருந்தாலும் துள்ளலிலும் முகபாவங்களிலும் குறைவைக்கவில்லை.

கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறை வழங்கிய இராவணேசன் என்ற வடமோடி நாடகத்தைத்தான் சொல்கிறேன்.

யாழ். திருமறைக்கலாமன்றம் யாழ்ப்பாணத்தில் நடத்தி ஈழத்தின் கூத்துவிழாவில் பங்கேற்பதற்காவந்த இராவணேசன், யாழ். பல்கலைக்கழகத்தில் கைலாசபதி அரங்கிலும் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் காட்சியளித்தான்.

மட்டக்களப்பில் இவன் மேடையேறிய சமயங்களிலெல்லாம் அவனைப் பார்ப்பதற்கு எனக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது.

கூத்துவிழாவுக்கு வந்த இராவணேசனை அதிக பொலிவோடு, திருவாதிரையாக யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்குக்குக் கொண்டுசென்றபோது சந்தர்ப்பத்தை நானும் பயன்படுத்தினேன்.

இது கூத்தில்லை. நாடகம்தான். பேராசிரியர் வித்தியானந்தனும் இதை நாடகமென்றே உருவாக்கினார். இது ஒருவடமோடி நாடகம். ஆனால், பேராசிரியர் தயாரித்த இராவணேசனுக்கும் இதற்கும் நிறைய மாற்றம் உள்ளது. இதை அதனுடன் சொல்லமுடியாது என்று இந்த நாடகத்தின் பிரதியாக்கம் வடிவமைப்பு, ஆட்டப் பயிற்சி, நெறியாள்கை என்று மொத்தத்தில் இந்த நாடகத்தின் சூத்திரதாரியாக விளங்கும் போராசிரியர் சி.மௌனகுரு சொன்னார்.

இதே இராவணேசன் நாடகத்தில் பேராசிரியர் வித்தியானந்தன் தயாரிப்பில் அப்பொழுது மாணவனாக இருந்த பேராசிரியர் சி.மௌனகுரு பொடியனாக துள்ளித்துள்ளி நடித்தார்.

நல்ல சிவலைப் பொடியனாய் மௌனகுரு நடித்த காட்சியை பேராசிரியர் சண்முகதாஸ் வர்ணித்தபோது அனைவரும் ரசித்தனர்.

இராவணேசனைப் பார்ப்பதற்கு அந்த மத்தியான வேளையிலும் கைலாசபதி கலையரங்கம் நிரம்பிவழிந்தது.

இராவணேசனுடன் தம்பி கும்பகர்ணன், மகன் இந்திரஜித் ஆகியோரும் தமது பங்கைச் சிறப்பாகச் செய்தனர். இராமன், இலக்குமணனாகவும், அங்கதனாகவும் வந்தவர்களும் நன்றாக நடித்தனர். 'பாவம் மண்டோதரி!

இராவணனும் சரி இலக்குமணனும் சரி தொடர்ந்து நாடகத்தில் நடிக்கா விட்டாலும்கூட தங்கள் வண்டியையும் தொந்தியையும் குறைத்து கட்டுடலாக புருஷலட்சணமாகத் தமது உடலை வைத்துக்கொள்ள முயற்சி செய்தால் நல்லது. அதிக சிரமமில்லாமல் யோகாசனத்தில் சில ஆசனங்களைச் சிலகாலம் செய்தாலே போதும்!

இராமனும் இலட்சுமணனும் வண்டியும் தொந்தியும் பெருத்திருந்தாலும் துள்ளலிலும் சுற்றிச்சுழன்று ஆடியதிலும் குறைவைக்கவில்லை. சபஷ்!

நாடகம் முடிந்ததும், ஒரு கலைஞரிடம் எப்படி என்று கேட்டேன். நல்லாயிருந்தது ஆனால் சுதி சேரவில்லை என்றார்!

நாடகத்தில் இலக்குவன் தோன்றிய ஒரு காட்சியில் இடையில் அவருடைய ஆடையை இறக்கிக் கட்டியதாலோ என்னவோ அவருடைய தொந்தி சரிந்து வழிகிற மாதிரி இருந்தது.

இச்சமயம் அவருடைய தொந்திகளும் தெரிந்தது. பார்வையாளர்களில் ஒரு பகுதியிலிருந்த சிலர் இச்சமயத்தில் பெரிதாக சிரித்தனர்.

நாடகம் முடிந்தபின் இதுபற்றிக் குறிப்பிட்ட ஒரு பத்திரிகையாளரும் எழுத்தாளருமான நண்பர் இதைத்தானே சினிமாக்களில் குறிப்பாகக் காட்டுகிறான்கள். தமிழ்படத்திலும் பம்பரம் கூட இதில்தானே விட்டாங்கள். இங்கை எதுக்கு சிரிச்சாங்க. இது ஆம்பிளை என்பதாலா என்றார் சிறிது வருத்தத்துடன்.

இது ரசனையா அல்லது வேறு ஏதாவது அர்த்தம் உண்டா?

மொத்தத்தில் கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை கலைஞர்களுக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம் உற்சாகமளித்திருக்கிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

சினிமாத்தனம் மிக்க தமிழக அரசியலில் அன்றாட நிகழ்வுகள் யாவும் சினிமா பாணியில் நடந்தேறி வருவது தெரிந்தவிடயமே.

தமிழ்ப்படங்களின் தனித்துவம் தமிழக அரசியலின் தனித்துவத் தன்மைக்கு நிகரானதே இரண்டுமே தமிழகத்தின் எதிர்காலத்தைப் பற்றிய அவநம்பிக்கையை வளர்ப்பனவாகவே உள்ளது. அரசியல் கிடக்கட்டும் அது திருத்த முடியாத ஒன்று.

இளைஞர்களைக் கெடுக்கும் வகையில் தமிழ்ப்படங்கள் தொடர்ந்து வெளிவந்த வண்ணமேயுள்ளன. இதன் தாக்கம் எமது மண்ணிலும் மோசமான விளைவுகளை கலாசார ரீதியில் ஏற்படுத்தி வருவதை பொறுப்புள்ள சமூக உணர்வு கொண்ட அனைவரும் உணர்வர்.

தமிழக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அண்மையில் ஒரு யோசனையை - அபூர்வமான யோசனையை வெளியிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் சினிமாத்துறையினருக்கு ஐந்து ஆண்டுகள் தடைவிதிக்க வேண்டும் என்பதே அந்த யோசனை

சாத்தியமற்ற யோசனைதான். என்றாலும் சரியான யோசனையே! இதைக்கேட்டுவிட்டு எனது நண்பர் ஒருவர் கூறினார்.

'சினிமாவுக்கு தடை விதிப்பதுடன் தமிழக அரசியலுக்கும் ஐந்தாண்டு தடை விதித்தால் தமிழகம் தப்பும்... ஆனால், ராமதாஸ் இதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்... ஏனென்றால் அவரும் அரசியல்வாதிதானே'.



-தெருவாசி

# கோவில் வீதி தாக்குதல் சம்பவம்; 9 இளைஞர்களும் பிணையில்!

யாழ்ப்பாணம் கோவில் வீதிப்பகுதியில் - சில வீடுகள் சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, கைது செய்யப்பட்ட ஒன்பது இளைஞர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

அண்மையில் மதகுரு ஒருவரின் துண்டுதலின் பேரில், கோவில் வீதிப் பகுதியிலுள்ள சில வீடுகளை இலக்கு வைத்து தாக்கப்பட்டிருந்தன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், ஒன்பது இளைஞர்கள் - பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இது தொடர்பான விசாரணைகள், நேற்று யாழ்.நீதிமன்றில் நீதிவான் விக்னராஜா முன்னிலையில் நடைபெற்றது. இந்த விசாரணைகளின் போது - குறித்த சம்பவத்தோடு தொடர்புடைய மதகுரு, சந்தேக நபர்கள், பாதிக்கப்பட்ட வீட்டு உரிமையாளருக்கு உரிய நட்டஈட்டை நீதிமன்றத்துக்கு வழங்குவார்கள் என உறுதி அளித்ததையடுத்தே, இவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

தலா பதினையாயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட இவர்கள் - சாட்சியையோ, முறைப்பாட்டுக்காரரையோ தொந்தரவு செய்யக்கூடாது எனவும், எச்சரிக்கை செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும், பிரதி சனிக்கிழமை தோறும் - யாழ்.பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இடவேண்டும் எனவும், நிபந்தனை விதிக்கப்பட்டது.

அதேவேளை - முறைப்பாட்டுக்காரரின் முறைப்பாட்டுக்கு அமைய, சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றப் பத்திரத்தை - அடுத்த விசாரணைகளுக்கு முன்பாக நீதிமன்றில் தாக்கல் செய்யும்படி, யாழ்.பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

அத்தோடு, அடுத்த கட்ட விசாரணைகளின்போது - சமூகமளிக்கும்படி, முறைப்பாட்டுகாரருக்கு அறிவித்தல் அனுப்பும்படியும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அதேவேளை - இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய கோவில் வீதிப் பகுதியைச் சேர்ந்த அன்ரனி ஜெயக்குமார் என்னும் இளைஞனை- 15,000 சாரீரப் பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான், தொடர்ந்தும்- கிழமையில் இருநாட்கள் நீதிமன்றில் கையொப்பம் இடவேண்டும் எனவும் பணித்தார்.

சம்பவத்தோடு தொடர்புடைய மதகுரு செய்த முறைப்பாட்டின்படி, கைதுசெய்யப்பட்ட ஜெயக்குமார்- தெல்லிப்பளை புனர்வாழ்வு நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### தேசிய பிக்கு...

இவர்களது சத்தியாக்கிரகத்தில் ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மற்றும் தினேஷ் குணவர்த்தனா ஆகியோர் கலந்து கொண்டனர். (01)

## தகவலை மறைத்துவிட்டதாக...

ரங்கள் தெரிவித்தன. இந்த விஜயம் ரத்துச் செய்யப்பட்டதை, இந்திய வெளியுறவு அமைச்சகம் உறுதி செய்துள்ளது.

இரு நாடுகளின் மூத்த படையதிகாரிகளும் சமநேரத்தில் விஜயம் செய்வது குறித்த தகவலை இலங்கை அரசு இந்தியாவுக்கு வழங்காததாலேயே, இந்தநிலை ஏற்பட்டதாக- இந்திய வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் மாதவேந்திர சிங், கடந்த 13 ஆம் திகதி கொழும்புக்கு விஜயம் செய்யவிருந்தார். இந்த நேரத்தில் பாகிஸ்தான் ஜெனரலின் விஜயம் இடம்பெறுவது குறித்து, தமக்கு தகவல் தரப்படாதது, வரலாற்று புவியியல் ரீதியான ஒத்துழைப்புக்களை வழங்கிவந்த இந்தியாவுக்கு, இலங்கை அளித்த பெரும் அதிர்ச்சி என்று, மூத்த இந்திய கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஜெனரலின் கொழும்பு விஜயம் குறித்து, இந்திய வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்திய பின்னரே, கடற்படைத் தளபதியின் கொழும்பு விஜயத்தை ரத்துச் செய்யுமாறு - ஆலோசனை கூறியதாக தெரியவருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புக்கு வந்த பாகிஸ்தான் தளபதி ஜெனரல் முகமட் அஸீஸ் கான் இலங்கையின் பல்வேறு இராணுவத் தளங்களுக்கு விஜயம் செய்ததோடு - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் உயரதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

இலங்கைக்குப் பல்வேறு கடற்படை உதவிகளை இந்தியா நீண்டகாலமாக வழங்கிவருகின்றபோதும், இலங்கை அரசு பாகிஸ்தான் ஜெனரலின் விஜயம் பற்றிய தகவலை மறைத்துவிட்டதாக இந்திய அதிகாரிகள் கோபமுற்றுள்ளனர்.

இந்தியா பெருமளவான இராணுவ உதவிகளை வழங்கியபோதும், இலங்கை பாகிஸ்தானை புதிய நண்பனாக உறவாடத் தொடங்கியிருப்பதாகவும், இலங்கையில் காலூன்ற பாகிஸ்தான் முயற்சி செய்துவருவதாக இந்தியா கருதுவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை - இலங்கைக்கு பத்து மில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை வழங்க, பாகிஸ்தான் முன்வந்துள்ளது என்றும், இந்திய கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தனிப்பட்ட பேதங்களை விலக்கி வேகமாக செயற்பட வேண்டும்!

## மாவை சேனாதிராசா தெரிவிப்பு

எமது கட்சி இன்று செயற்படும் திறன் போதாது. எமது திறமையான, வேகமான செயற்பாடுகளை முன்வைக்க வேண்டியவேளை இதுவாகும். இந்த நேரத்தில், நாம் போட்டிகளையும், தனிப்பட்ட பேதங்களையும் விலக்கி செயற்படவேண்டும். கட்சிக்குள் உள்ள இந்த தேக்கநிலையை களைந்து, புத்துயிர் அளிக்க அனைவரும் முன்வரவேண்டும்.

இவ்வாறு - நேற்று அமரர் வன்னியசிங்கத்தின் நினைவுதினம், யாழ்ப்பாணம் - ஸ்ரான்லி வீதியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நடந்தபோது, நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

தந்தை செல்வா பிறந்த இடம் காங்கேசன்துறை, வன்னியசிங்கம் பிறந்த இடம் கொல்லன்கலட்டி. இந்த இடங்களையெல்லாம் - இன்று உயர்பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரால் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. எமது இடங்களிலேயே நாம் கால்மிதிக்கமுடியாத, துர்ப்பாக்கிய நிலையிலுள்ளோம். எமது இடங்களை நாம் மீட்டாக வேண்டும். இந்த இடங்களிலிருந்தெல்லாம் ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேறவேண்டும். இந்த அடக்குமுறைகளை எதிர்த்து, மக்கள் போராட முன்வரவேண்டும்.

சர்வதேச சக்திகள், எமது இனத்தினுடைய ஆயுதப் போராட்டத்தை மழுங்கடிக்கும் முயற்சியில் ஈடுபட முனைகின்றன. இதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம். எமது தனிப்பட்ட நலன்களை விடுத்து, எல்லோரும் இன விடுதலையை மையமாக வைத்து, செயற்படவேண்டும் என, அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நினைவுதின நிகழ்வில்- சி.சிவமகாராசா, மா.க.ஈழவேந்தன் ஆகியோரும் உரையாற்றினர். கட்சிப் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### முகவர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு பொருட்களுக்கு யாழ்ப்பாணத்தில் முகவர்களாகச் செயற்படும் வர்த்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

நாளை காலை 10 மணிக்கு பளையிலுள்ள வருவாய்த்துறை செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் - கொழும்புப் பொருட்களுக்கான முகவர்களாகச் செயற்படும் அனைத்து வர்த்தகர்களையும் கலந்துகொள்ளுமாறு, நிதித் துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

### பஸ் மோதியதில் மாணவி படுகாயம்!

கிளிநொச்சி - தருமபுரம் பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில், சிக்கி படுகாயமடைந்த பாடசாலை மாணவி ஒருவர் - சுயநினைவிழந்த நிலையில், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், பாடசாலை மாணவியான எஸ்.ஜொய்சி (வயது 7) என்பவரே படுகாயமடைந்தவராவார். பாடசாலைக்குச் சென்று திரும்பும் வழியிலேயே, இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (111)

### பொதுக்கூட்டம்!

யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம், இன்று காலை 11 மணிக்கு கந்தர் மடத்திலுள்ள பணிமனையில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் பல முக்கியமான விடயங்கள் ஆராயப்படவுள்ளதனால், சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்பு...

ஈ.கரலியத்த, இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, கடற்படைத்தளபதி தயா சந்தகிரி, யாழ்ப்பாண கூட்டுப் படைத்தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, காரைநகர் கடற்படைத்தளபதி மற்றும் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் மற்றும் 15 பிரதேச செயலர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

### சமாதான...

யில் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது என்றும், அமெரிக்க இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தினால் கடந்த ஜூலை 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை யோசனைகளுக்கான விடுதலைப் புலிகளின் பதில் அர்த்தபுஷ்டியானதாக அமையும் எனவும், அதன்மூலம் இரு தரப்பினரும் மிகவிரைவில் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் கலந்துகொள்ள வழிவகுக்கப்படும் எனத் தான் நம்புவதாகவும், அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மனித உரிமை மீறல்கள் அதிகரிப்பதாக ஜனாதிபதி செயலகம் குற்றச்சாட்டு!

(கொழும்பு)

தடுப்புக்காவலில் உள்ளோர்- துன்புறுத்தல்களுக்கும், மரணத்துக்கும் உள்ளாக்கப்படுவதன் காரணமாக, மனித உரிமை மீறல் சம்பவங்கள் நாளுக்குநாள் அதிகரித்துவருவது - ஜனாதிபதியின் கவனத்தை ஈர்த்துள்ளது என்று, ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் உயர் பாதுகாப்பை பெறவேண்டிய இளம் வயதினர், பிள்ளைகள், ஏழைகள், அநாதைகள் போன்றோரும் - இவ்வாறு துன்புறுத்தல்களுக்கு உட்படுவது, இலங்கையில் சட்ட ஏற்பாடுகளையும், சர்வதேச உடன்பாடுகளையும் மீறும் ஒருசெயலாகும்.

இவ்வாறு - தடுப்புக்காவலில் உள்ளோர் - துன்புறுத்தல்களுக்கும், சித்திரவதைகளுக்கும் உள்ளாவது, மரணமடைவதையும் தடுத்து நிறுத்துவதற்கு, பொலிஸ் திணைக்களம் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து தனக்கு உடனடியாக அறியத்தருமாறும் - சட்டமா அதிபருடனும், மனித உரிமை ஆணைக்குழுவுடனும் கலந்துரையாடி, குறுகிய மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் குறித்து திட்டமொன்றை வகுக்குமாறும் - ஜனாதிபதி, பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளதாக, அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பகிறதுது.

# ஒரு இலட்சம் கையெழுத்து வேட்டை திரட்டும் நடவடிக்கை ஆரம்பமானது

வலி.வடக்கிலுள்ள மக்களை, அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதி மறுக்கும் இராணுவத்தினரின் செயலையும், அந்தப் பகுதி மக்களின் அவல வாழ்வினை - ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கு தெரியப்படுத்தும் முகமாக, ஒரு லட்சம் கையெழுத்து வேட்டை நேற்று ஆரம்பமானது.

வலி.வடக்கு பொதுநிறுவன பிரதிநிதிகள், சமூகசேவை பிரதிநிதிகள், தெல்லிப்பளை ப.நோ.கூ சங்க ஊழியர்கள் என்போரால் - கிராமம் கிராமமாகச் சென்று, இந்தக் கையெழுத்து வாங்கும் செயற்பாடு நடைபெறுகிறது. நேற்றுமட்டும் 30,000 கையெழுத்து வாங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இன்று கிளிநொச்சி...

அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினரை அவர்களது கட்சி தலைமையகமான தாருசலாமில் சந்தித்தனர். இந்தச் சந்திப்பில் அரசிற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை ஆரம்பிக்கின்றபோது, முஸ்லிம்கள் பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக பங்குபற்ற அனுமதிக்கவேண்டும் எனவும், முஸ்லிம்களின் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படவேண்டும் எனவும், ஹக்கீம் தெரிவித்தார். அத்துடன், விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்துடன் சந்திப்பொன்றை - முஸ்லிம் காங்கிரஸ் மேற்கொள்ள நோர்வே ஏற்பாடொன்றை செய்து தரவேண்டுமெனவும், ஹக்கீமினால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து, ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தனையும், ஹெல்கிசன் குழுவினர் சந்தித்தனர். இங்கு டக்ளஸ் தேவானந்தா - நாம் சமாதானத்திற்கு எதிரானவர்கள் அல்ல. நாம் ஜனநாயக வழிக்கு திரும்பியவர்கள். அதனால், எமது ஆயுதங்கள் அனைத்தையும் அரசிடம் ஒப்படைத்த பின்னர், எமது அமைப்பின் உறுப்பினர்கள் கொல்லப்படுவது- எமக்கு மிகவும் கவலையை அளிக்கின்றது. முதலில் இடைக்கால தீர்வை முன்வைத்தவர்கள் நாங்கள்தான் என, தெரிவித்தார்.

நேற்றிரவு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சந்திப்பினை நடத்திய ஹெல்கிசன் குழுவினர், இன்று வன்னிசென்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திப்பர். இந்தச் சந்திப்பையடுத்து, கொழும்பு திரும்பும் இவர்கள், இன்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் சந்தித்த பின்னர், நாளை நாடு திரும்புவர்.

### மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1547 திகதி: 16.09.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| A | 6 | 1 | 5 | 2 | 5 | 6 |

(சி-1432)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விபரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 93.77 | 94.44 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 148.64 | 150.33 |
| 1 யூரோ | 104.26 | 105.72 |
| 1 சுவிஸ் பிராங் | 67.01 | 68.24 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 61.65 | 62.88 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.70 | 25.70 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 18.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.